இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023



# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 81 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 13 – திங்கள்கிழமை 30 அக்டோபர் 2023 – சென்னை 12 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 81: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 13 - Monday 30 October 2023 - Chennai 12+8 Pages ₹ 5.00


## ‘ஈ டிவி பாரத்’ செய்தித்தளத்திற்கு அளித்த

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி 13 மொழிகளில் வெளியானது!

**சென்னை, அக். 30 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஈ டிவி பாரத் செய்தித்தளத்திற்கு அளித்துள்ள இப்பேட்டி இந்தியா முழுவதும் 13 மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.**

கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ‘ஈடிவி பாரத்’ செய்தித் தளத்துக்கு அளித்த நேர்காணலின் விவரம் வருமாறு:-

**நெறியாளர் :** *தமிழ்நாட்டின் முதலமைச்சராக மக்கள் நலத் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்தி வருகிறீர்கள். காலை உணவுத் திட்டமாக இருக்கட்டும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமாகட்டும் பெரும் பொருட்செலவு வைக்கக்கூடிய இத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாநில அரசுக்கு இருக்கும் சவாலாக எதைக் கருதுகிறீர்கள்?*

தற்போதைய ஒன்றிய அரசின் பாரபட்சமான நிதி ஒதுக்கீட்டு அணுகுமுறை போன்ற சவால்களின் தாக்கத்திலிருந்து முழுமையாக விடுபட முடியாவிட்டாலும், இரண்டு ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு சென்றிருக்கிறது. தமிழ்நாட்டை இன்று இந்தியாவே திரும்பிப் பார்க்கும் விதமாக, தேர்தலில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறது. ஆகவே இந்தியாவுக்கே முன்னோடியான இந்த மக்கள்நலத் திட்டங்களைத் திறம்பட செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

**நெறியாளர் :** *வடக்கில் வலதுசாரிகளின் பெரும்பலமாக இருக்கும் இந்துத்வா அடிப்படையிலான ஒருங்கிணைப்பை உடைக்க வேண்டிய தேவை இருப்பதாகக் கருதுகிறீர்களா? இதனை உடைத்து*

ஆகவே, பா.ஜ.க.வின் மதவாத அரசியலுக்கு எதிராக உள்ள அனைத்து ஜனநாயக சக்திகளையும் ஒருங்கிணைத்து, தேர்தல் களத்தில் உள்ள வெற்றி வாய்ப்புகளுக்கேற்ப கூட்டணிக் கட்சிகளிடையே விட்டுக் கொடுக்கும் தன்மையை ஏற்படுத்தி, மக்களின் பேராதரவுடன் வெற்றிபெறுவதே இந்தியா கூட்டணியின் தேர்தல் உத்தி. அதில் வெற்றி பெற முடியும் என்பதை சமீபத்திய இடைத் தேர்தல்கள், கர்நாடக மாநிலச் சட்டமன்றத் தேர்தல் போன்றவை காட்டியிருப்பதைப் பார்த்திருப்பீர்கள்.

### தேசிய அரசியலில் தி.மு.க.வின் பங்களிப்பு மிகப்பெரியது!

**நெறியாளர் :** *தி.மு.க. இப்போது தேசிய அரசியலில் அழுத்தமாக காலூன்ற முயல்கிறதா? உங்கள் உரைகள் முன்னெப்போதும் இல்லாத அளவில் இந்தியிலும்*

**சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க தமிழ்நாட்டில் களம் அமைத்துக் கொடுத்தவர் கலைஞர்.**

**சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசின் முதுகெலும்பாக இருந்தது தி.மு.கழகம். அதன் காரணமாக இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கான 27% இடஒதுக்கீடு வழங்க வித்திட்டு, அணையா விளக்கான “சமூக நீதி”யை இந்தியா முழுமைக்கும் ஏற்றி வைத்தது.**

**தி.மு.க. இருக்கும் இடத்தில் மதவாதம் இருக்காது என்ற பாராட்டைப் பெறும் விதத்தில், குறைந்தபட்ச பொது செயல்திட்டத்துடன் வாஜ்பாய் அரசுக்கு ஆதரவளித்து, இந்தியாவில் கூட்டணி அரசு தன் முழுமையான ஆட்சிக்காலத்தை நிறைவு செய்ய முடியும் என்பதற்கு உறுதுணையாக நின்று, ஒன்றியத்தில் நிலையான**

**நெறியாளர் :** *ஒன்றிய அரசு புதிதாகக் கொண்டு வரும் மசோதாக்களுக்கு இந்தியில் பெயர் வைக்கிறது. ஏற்கனவே உள்ள சட்டங்களும் இந்தியில் பெயர் மாற்றம் செய்யப்படுகின்றன. இந்தி ஆதிக்க எதிர்ப்புக்காக அறியப்பட்ட தி.மு.க.வும் தமிழ்நாடும் இந்த விஷயத்தில் என்ன செய்யப் போகின்றன?*

### பா.ஜ.க.வின் ‘இந்தி’ திணிப்பை கடுமையாக எதிர்க்கிறது தி.மு.க.!

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** இதுகுறித்து நாடாளுமன்ற மாநிலங்களவை, மக்களவை இரண்டிலுமே தி.மு.க.வின் எம்.பி.,க்கள் கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். முழுக்க முழுக்க இந்தியிலான அறிவிப்புகள், அழைப்பிதழ்களைக் கிழித்தெறிந்து எதிர்ப்பைக் காட்டியிருக்கிறார்கள்.

பா.ஜ.க. அரசின் ஒரே நாடு, ஒரே




**தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** திராவிட மாடல் அரசின் சிறப்பான திட்டங்களாக நீங்கள் குறிப்பிடும் இந்தத் திட்டங்களின் வரிசையில் மகளிருக்கான விடியல் பயணம் திட்டமும் முக்கியமானது. இவை அனைத்துமே அன்றாடத் தேவைக்கான திட்டமாக மட்டுமின்றி, எதிர்கால வளர்ச்சிக்கான அடித்தளமாகவும் அமைந்துள்ள காரணத்தால், இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் எத்தகைய சவால்கள் இருந்தாலும் அதனை முழுமையாக நிறைவேற்றித் தருவதில் திராவிட மாடல் அரசு உறுதியாக இருக்கிறது.

### சவால்களை எதிர்கொண்டு திறம்பட ஆட்சி நடக்கிறது!

முந்தைய அ.தி.மு.க ஆட்சியின் பத்தாண்டுகாலத்தில் உருவாக்கப்பட்ட கடன் சுமை – நிதிப் பற்றாக்குறை, நிர்வாகச் சீர்கேடு போன்றவற்றை சமாளித்து,

*வாக்குகளைப் பெற இந்தியா கூட்டணியின் உத்தி என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:-** மதவாதம் என்பதைத் தவிர பா.ஜ.க.விடம் வேறு கொள்கை எதுவும் இல்லை! ஆட்சிக்கு வந்தாலும், சாதனைகளைக் காட்டி வாக்குகளைப் பெற முடியவில்லை. வெறுப்பரசியலை வைத்தே வாக்கு பெற நினைக்கிறார்கள்.

### மதவாதத்தை நம்பாமல் கொள்கைகளை நம்பி நிற்கிறோம்!

ஆனால் இந்தியா கூட்டணியின் வலிமை என்பது மதநல்லிணக்கம். நாங்கள் அரசியல்சட்டம் வரையறுக்கும் கொள்கைகளை நம்பி நிற்கிறோம். பன்முகத்தன்மை கொண்ட இந்திய மாநிலங்களின் உரிமைகளை மதித்தல், மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் மீது கவனம் குவித்தல் போன்றவற்றில் நம்பிக்கை வைத்து நிற்கிறோம்.

*வெளியாகின்றன. பிரதமராகும் லட்சியம் தி.மு.க. தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு இருக்கிறதா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:-** **தேசிய அரசியலில் தி.மு.க. ஏற்கனவே மூன்றாவது பெரிய கட்சியாக இருக்கிறது. தன் அழுத்தமான முத்திரையை கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாகப் பதித்து இன்றைக்கு இந்தச் சிகரத்தை எட்டியுள்ளது.**

**வங்கிகள் தேசியமயம் உள்ளிட்ட முற்போக்கான செயல்பாடுகளுக்காக பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் அரசுக்கு உறுதுணையாக நின்று தேசிய அரசியலில் தி.மு.க.வின் முத்திரையைப் பதிக்கச் செய்தவர் தலைவர் கலைஞர்.**

**நெருக்கடி நிலைக் காலத்தில் இந்தியாவின் எந்த மாநிலமும் முன்னெடுக்காத ஜனநாயக உரிமைக்குரலை முன்னெடுத்து, வடஇந்திய அரசியல் தலைவர்களும்**

**ஆட்சிக்கு வித்திட்டது கலைஞரின் தி.மு.கழகம்தான்.**

**இரண்டு முறை டாக்டர் மன்மோகன் சிங் பிரதமராகப் பொறுப்பேற்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலும் தி.மு.க. முதன்மையாக இருந்தது. குடியரசுத் தலைவர் தேர்தல்களில் தி.மு.க.வின் நிலைப்பாடுகள் தேசிய அளவில் கவனம் பெற்று, வெற்றிகரமாக அமைந்துள்ளன. தலைவர் கலைஞரின் வழியில், நாட்டின் இன்றையச் சூழலையும், சமூக வலைதளங்கள் உள்ளிட்ட தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியைக் கருத்தில்கொண்டும் இந்தியா கூட்டணியின் செயல்பாட்டில் தி.மு.க தன் பங்களிப்பை விரிவுபடுத்தியுள்ளது.**

**என் உயரம் எனக்குத் தெரியும் என்று சொன்னவர் எங்கள் தலைவர் கலைஞர். மு.க.ஸ்டாலினுக்கும் தன் உயரம் நன்றாகத் தெரியும்!**

மொழி என்கிற மறைமுகத் திட்டம், தமிழை மட்டுமின்றி இந்தியாவின் பிற மாநிலங்களில் பேசப்படும் அவரவர் தாய் மொழிகளுக்கும் எந்தளவு ஆபத்தை உண்டாக்கும் என்பதை தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. பல மாநிலங்களிலும் இதுகுறித்த விழிப்புணர்வு நிகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எங்களைப் பொறுத்த வரை நாங்கள் எந்த ஒரு மொழிக்கும் எதிரிகள் அல்ல.

எங்கள் மொழி மீது எந்தவொரு மொழியைத் திணித்தாலும் அதை உறுதியாக எதிர்ப்பவர்கள். அந்த நிலை தொடரும். நாடாளுமன்றத் தேர்தல் முடிவு களுக்குப் பிறகு, அமையவிருக்கிற புதிய ஆட்சியில் அனைத்து மொழிகளுக்கும் உரிய உரிமையும் முக்கியத்துவமும் சமமாக வழங்கப்படும்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 30-10-2023

# பொய்ப் பிரமாணம் எடுத்துள்ள ஆளுநர் 1

**வா**யைத் திறந்தாலே பொய்யும் புளுகும்தான் ஆளுநர் ஆர்.என். ரவிக்கு வருகிறது. ஒரு சம்பவத்தை வைத்து அவர் நூற்றுக்கணக்கான பொய்களைச் சொல்லத் தொடங்கி விட்டார்.

ஆளுநர் மாளிகை இருக்கும் சாலையில் கடந்த 25 ஆம் தேதி என்ன நடந்தது?

**25.10.2023 அன்று மதியம் 3 மணியளவில், கருக்கா வினோத் (42 வயது - E-3 தேனாம்பேட்டை காவல் நிலையத்தின் வழக்கமான குற்றவாளி) என்பவர் ஆளுநர் மாளிகை அருகே தனியாக சாதாரணமாக நடந்து வந்தார். பெட்ரோல் நிரப்பிய நான்கு பாட்டில்களைக் கொண்டு வந்து, அவற்றை ஆளுநர் மாளிகை அமைந்துள்ள சர்தார் படேல் சாலையில் எதிர்ப்புறத்தில் இருந்து எறிய முயன்றார். ஆளுநர் மாளிகையின் வெளிப்புறத்தில் பாதுகாப்புப் பணியில் இருந்த தமிழ்நாடு காவல்துறை போலீசாரால் தடுக்கப்பட்டார். அப்போது சம்பவ இடத்திற்கு எதிரே சற்று தூரத்தில் இருந்து இரண்டு பாட்டில்களை வீசினார். அவை ஆளுநர் மாளிகையின் அருகே சர்தார் படேல் சாலையில் வைக்கப் பட்டிருந்த தடுப்பரண்களுக்கு அருகே விழுந்தது. பாதுகாப்பு போலீசாரால் உடனடியாக கைது செய்யப்பட்டார். காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டு விட்டார். இச்சம்பவத்தால், பொருட்களுக்கோ அல்லது எந்த நபருக்கோ எவ்வித சேதமோ, காயமோ ஏற்படவில்லை.**

- இவ்வளவுதான் நடந்தது. ஆனால் ஆளுநர் மாளிகை சொல்லும் பொய், பெட்ரோல் பாட்டில்களை விடப் பெரிய பொய் பாட்டில்களாக இருக்கின்றன.

★ **பொய் 1:** ராஜ்பவன் மெயின் கேட் எண் 1 வழியாக பெட்ரோல் குண்டுகளை ஏந்திய மர்ம நபர்கள் சிலர் உள்ளே நுழைய முயன்றனர்.

**உண்மை:** குண்டுகளை ஏந்திய மர்ம நபர்கள் ஏராளமானவர்கள் என அப்படி யாரும் வரவில்லை. வினோத் என்ற ஒரே ஒரு நபர் மட்டும்தான் வந்தார். அவரும் சாலையின் அந்தப் பக்கம் இருந்து வாசலை நோக்கித் தான் வீசினாரே தவிர, உள்ளே நுழைய முயற்சிக்கவில்லை.

நந்தனம் சிக்னலில் இருந்து நடந்தே வருகிறார் வினோத். நந்தனம் கலைக் கல்லூரி, சைதாப்பேட்டை பாலம், சின்னமலை வரை நடந்தே வருகிறார். அவர் தனி ஆளாகத் தான் நடந்து வருகிறார். அங்கிருந்து சைதை நீதிமன்றம் வழியாக நடந்து சென்றுள்ளார். இது ஆளுநர் மாளிகைக்கு எதிர்புறம் உள்ள சாலையாகும். இந்த சாலையைக் கடந்தால்தான் ஆளுநர் மாளிகை வாசலுக்கு செல்ல முடியும். சாலையை வினோத் கடக்கவில்லை. ஆளுநர் மாளிகைக்கு எதிரே நின்று ஆளுநர் மாளிகை முன்பு வீச முயற்சித்துள்ளார். அங்கு பணியில் இருந்த ஐந்து காவலர்கள் உடனே அவரை தடுத்து அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவை அனைத்தும் வீடியோ காட்சிகளாக உள்ளன.

★ **பொய் 2:** பாதுகாப்புப் பணியாளர்கள் தாக்குதலைக் கட்டுப்படுத்த முயன்ற போதும், மற்றொரு பெட்ரோல் குண்டு வீசப்பட்டது. இதனால் பிரதான நுழைவாயிலுக்கு பலத்த சேதம் ஏற்படுத்தப்பட்டது.

**உண்மை:** பிரதான நுழைவாயிலில் பலத்த சேதமும் ஏற்படவில்லை. சிறு சேதமும் ஏற்படவில்லை. பாட்டில் வீசப்பட்டது பிரதான வாசலில் இருந்து 30 மீட்டர் தூரத்தில் - பேரிகாட் தாண்டி சாலையில்தான் விழுந்துள்ளது. எனவே நுழைவாயிலில் எந்த சிறு சேதமும் கிடையாது.

★ **பொய் 3** : வினோத்துடன் நிறையப் பேர் வந்துள்ளார்கள்.

**உண்மை:** கண்காணிப்புக் கேமரா பதிவுகளை ஆராய்ந்ததில், மேற்படி நபர் நந்தனத்தில் இருந்து சம்பவ இடம் வரை தனியாகவே வந்துள்ளார்.

★ **பொய் 4** : அந்த நபரை தப்பிக்க விட்டு விட்டார்கள்.

**உண்மை:** உடனடியாக அவர் கைது செய்யப்பட்டார். சரியாகச் சொல்வதாக இருந்தால் சம்பவ இடத்திலேயே கைது செய்யப்பட்டார்.

★ **பொய் 5** : அவர் மீது வழக்கு பதியவே இல்லை.

**உண்மை:** அன்றைய தினமே J-3 கிண்டி காவல் நிலையத்தில் அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. உடனடியாக அவர் IV-வது பெருநகர குற்றவியல் நடுவர் அவர்கள் முன்பு ஆஜர்படுத்தப்பட்டு, 09.11.2023 வரை சிறையில் வைக்கப்பட்டார்.

★ **பொய் 6** : ஆளுநர் அவர்களுக்கு எதிராக பகிரங்க மிரட்டல், அவதூறுப் பேச்சு மற்றும் தாக்குதல் போன்ற பல்வேறு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதால் இந்த பாட்டில் வீச்சு சம்பவம் தொடர்பாக காவல்துறையினர் நியாயமான முறையில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யவில்லை.

**உண்மை:** குற்றவாளி கைது செய்யப்படுகிறார். நீதிமன்றத்தில் நிறுத்தப்படுகிறார். சிறையில் அடைக்கப்பட்டுகிறார். ஆளுநர் மாளிகைக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்படுகிறது. இதற்கு பின்னால் சதி ஏதாவது இருக்குமா என காவல் துறை விசாரிக்கிறது. இதற்கு மேல், மேல் நடவடிக்கை என்ன எடுக்க முடியும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

★ **பொய் 7**: உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை.

**உண்மை:** உடனடியாகவே நடவடிக்கை எடுக்கப்பட்டது.

★ **பொய் 8** : ஏப்ரல் 19, 2022 அன்று மயிலாடுதுறை சென்ற போது ஆளுநரின் வாகனம் தாக்கப்பட்டது. இது சம்பந்தமாக காவல்துறையில் புகார் தெரிவிக்கப்பட்டும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை.

**உண்மை:** ஆளுநரின் வாகனம் மற்றும் கான்வாய் அப்பகுதியை கடந்து சென்ற பின்னர் அங்கு கூடியிருந்தவர்களில் சிலர் கருப்புக்கொடிகளை சாலையில் வீசினர். அக்கொடிகள் ஆளுநரின் வாகனம் மற்றும் கான்வாய் முழுமையாக சென்றபின் பின்னால் வந்த வாகனங்கள் மீது விழுந்தன. இச்சம்பவம் தொடர்பாக மயிலாடுதுறை காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு 73 பேர் கைது செய்யப்பட்டனர். மேற்படி வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

ஆளுநரின் கான்வாய் மீது கற்கள் மற்றும் கட்டைகள் வீசப்பட்டன என்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும்.

**- தொடரும்**




உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தொப்பம்பட்டியில் 11,816 பயனாளிகளுக்கு ரூ.117.85 கோடி மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை 26.10.2023 அன்று வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குர் திருமதி பெ.திலகவதி, பழனி வருவாய் கோட்டாட்சியர் சௌ.சரவணன், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி இரா.சத்தியபுவனா ராஜேந்திரன், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி மு.அய்யம்மாள், ஒட்டன்சத்திரம் நகர்மன்றத் தலைவர் க.திருமலைச்சாமி, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் கா.பொன்ராஜ், கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் கோ.காந்திநாதன், மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் சு.இராமகிருஷ்ணன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் நா.சரவணன் உள்ளிட்டோர் உள்ளனர்.

### அளப்பரிய திட்டங்களை அள்ளி வழங்கும் நம்

# முதல்வருக்கு வரும் காலங்களில் மக்கள் பேராதரவு வழங்க வேண்டும்!

## ஒட்டன்சத்திரம் தொகுதியில் மாநாடு போல் நடைபெற்ற பிரமாண்ட விழாவில் ரூ.117.85 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கி அமைச்சர் அர.சக்கரபாணி உரை!

ஒட்டன்சத்திரம், அக். 30- உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தொப்பம்பட்டியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, தலைமையில் 26.10.2023 அன்று நடைபெற்ற மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 11,816 பயனாளிகளுக்கு ரூ.117.85 கோடி மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி முன்னிலை வகித்தார்.

விழாவில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, வருவாய்த் துறை சார்பில் 687 பயனாளிகளுக்கு உழவர் பாதுகாப்புத் திட்ட அட்டை, முதலமைச்சரின் சாலை விபத்து நிவாரணம் 40 பயனாளிகளுக்கு ரூ.27.00 இலட்சம் மதிப்பிலும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் பாரம்பரிய வேளாண் வளர்ச்சி மற்றும் பிற திட்டங்களின் கீழ் 1000 பயனாளிகளுக்கு ரூ.1.41 கோடி மதிப்பிலும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் சொட்டுநீர் பாசனக் கருவிகள் 1001 பயனாளிகளுக்கு ரூ.1.90 கோடி மதிப்பிலும்,

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் 250 பயனாளிகளுக்கு ரூ.16.38 இலட்சம் மதிப்பிலான தேய்ப்பு பெட்டிகள், 425 பயனாளிகளுக்கு ரூ.25.50 இலட்சம் மதிப்பிலான தையல் இயந்திரங்கள், மாவட்ட தொழில் மையம் சார்பில் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பயனாளிக்கு ரூ.2.58 கோடி மதிப்பிலும் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் ஒருங்கிணைந்த தீவண மேம்பாட்டு இயக்கம் (2023-2024) திட்டத்தின் கீழ் 35 பயனாளிகளுக்கு ரூ.3.69 இலட்சம் மதிப்பிலும்,

மருத்துவம் மற்றும் பொது சுகாதாரத்துறை சார்பில் 768 பயனாளிகளுக்கு ரூ.14.78 இலட்சம் மதிப்பிலும், தொழிலாளர் நலத்துறை சார்பில் கல்வி ஊக்கத்தொகை மற்றும் ஓய்வூதியம் 51 பயனாளிகளுக்கு ரூ.25,590 மதிப்பிலும், மருத்துவத்துறை சார்பில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் 140 பயனாளிகளுக்கு ரூ.7.00 கோடி மதிப்பிலும், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சார்பில் 120 துாய்மைப் பணியாளர்களுக்கு நலவாரிய அட்டை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 603 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ .2.54 கோடி மதிப்பிலும் ,

மத்திய கூட்டுறவு வங்கி சார்பில் 6509 பயனாளிகளுக்கு ரூ .101.32 கோடி மதிப்பில் பயிர்க்கடன் மற்றும் இதர கடனுதவிகள் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை சார்பில் 175 பயனாளிகளுக்கு ரூ.17.50 இலட்சம் மதிப்பிலும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 11 பயனாளிகளுக்கு ரூ.2.66 இலட்சம் மதிப்பில் மோட்டார் பொருத்தப்பட்ட நகரும் வண்டிகள் என மொத்தம் 11,816 பயனாளிகளுக்கு ரூ.117.85 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

**முதல்வர் வழங்கும் திட்டங்கள்!**

இவ்விழாவில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசிய தாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, அவற்றை திறம்பட செயல்படுத்தி வருகிறார் எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரசின் நலத்திட்ட உதவி சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதோடு, சொல்லாத பல திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகிறார். 234 சட்டமன்ற தொகுதிகளும் சீரான வளர்ச்சி பெற வேண்டும் என்ற எண்ணத்தில் அனைத்து தொகுதிகளிலும் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக மகளிர் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மகளிருக்கு நகர பேருந்தில் கட்டணமில்லா பயண சேவை வழங்கப்பட்டு வருகிறது அரசு பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து உயர்கல்வி படிக்கும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 உதவித்தொகை வழங்கும் புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கூட்டுறவு வங்கிகளில் மகளிர் சுயஉதவிக்குழுவினருக்கு ரூ.20.00 இலட்சம் வரை கடனுதவிகள் வழங்கப்படுகிறது.

**ஒரு கோடிக்கும் மேற்பட்ட பெண்களுக்கு மாதம் ரூ.1000/-**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தற்போது கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தை கொண்டு வந்துள்ளார். தகுதியான இல்லத்தரசிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் திட்டம் கடந்த செப்டம்பர் 15ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது இத்திட்டத்தின் மூலம் சுமார் 1.06 கோடி குடும்பத்தலைவிகள் பயனடைந்துள்ளனர் மேலும், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கிடைக்கப்பெறாதவர்கள் இசேவை மையத்தில் ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வங்கி புத்தகம், வீட்டு வரி ரசீது ஆகியவைகளுடன் பதிவு செய்தால் அந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியிருந்தால் அவர்களுக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் இப்படி எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக திகழும் வகையில் தமிழ்த்தை முதன்மை மாநிலமாக மாற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்.

அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது இதன்மூலம் 31,000 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 17.50 இலட்சம் குழந்தைகள் பயன்பெறுகின்றனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதுபோல் பல்வேறு சிறப்பான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார் . குறிப்பாக பெண்கள் முன்னேற்றத்திற்காக இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

**"தமிழ்நாடு அரசின் மரம் வளர்ப்புத் திட்டம்!"**

"மரத்தை நாம் வளர்த்தால் மரம் நம்மை வளர்க்கும் என்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்னதுபோல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தின் வனப்பரப்பை 23 சதவீதத்தில் இருந்து 33 சதவீதமாக உயர்த்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள் . திண்டுக்கல் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 35 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு வருகிறது.

வேளாண்மை துறை மூலம் விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகிறது. மரங்களை வளர்ப்பதால் சுற்றுச்சூழல் பாதிப்புகள் அகற்றப்பட்டு சுகாதாரமான காற்று நமக்கு கிடைக்கும் . நமது வருங்கால சந்ததிகள் சுகாதாரமான காற்றை சுவாசிக்க நாம் மரங்களை வளர்க்க வேண்டும்.

தமிழகத்தில் குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்தவர் களில் தகுதியானவர்களுக்கு 15 நாட்களில் குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது புதிய குடும்ப அட்டை பெற ஆன்லைனில் விண்ணப்பித்தால் வீட்டிற்கு தபாலில் குடும்ப அட்டை வந்து சேரும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆட்சிப்பொறுப்பேற்ற 2 ஆண்டுகளில் தமிழகத்தில் இதுவரை சுமார் 16 லட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன குடும்ப அட்டை எதிர்பாராதவிதமாக தொலைந்து போனால் புதிய குடும்ப அட்டை பெற ஆன்லைனில் விண்ணப்பித்தால் வீட்டிற்கு தபாலில் குடும்ப அட்டை வந்து சேரும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது மேலும், நியாய விலைக் கடைகளில் கைரேகை பதிவு மூலம் பொருட்கள் வாங்கும் போது சில சிரமங்கள் ஏற்படுகின்றன அவற்றை தவிர்க்கும் வகையில் விரைவில் கண் கருவிழி மூலம் பதிவு மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வயதானவர்கள், மாற்றுத்திறனாளிகள், நோயாளிகள் என நியாயவிலை கடைக்குச் செல்ல முடியாதவர்கள், பொருட்கள் வாங்க வேறு ஒரு நபரை நியமித்து விண்ணப்பம் அளித்தால் அந்த நபரிடம் பொருட்கள் வழங்கப்படும் வகையில் தமிழகத்தில் சுமார் 3.50 இலட்சம் பேர் பயனடைந்து வருகின்றனர் நியாயவிலைக்கடைகளில் தரமான அரிசி பருப்பு, எண்ணைய், அந்த சர்க்கரை போன்ற பொருட்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியுள்ள "இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48" திட்டத்தில் யாராவது விபத்தில் சிக்கி காயமடைந்தால் அவர்களுக்கு முதல் 48 மணி நேரத்திற்கு வழங்கப்படும் சிகிச்சைக்கான செலவை அரசு ஏற்றுள்ளது.

**இரண்டாண்டில் 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்!**

தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் தமிழ்நாட்டில் 2 இலட்சம் விவசாயிகளுக்கு விவசாய மின் இணைப்பு வழங்க அனுமதி அளித்துள்ளார் அதில் 1.50 இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஒட்டன்சத்திரம், பழனி சட்டமன்ற தொகுதிக்கு காவிரி நீர் ஆதாரத்தைக் கொண்டு கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்த ரூ .1000 கோடி மதிப்பீட்டிலான குடிநீர் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டால் வரும் 30 ஆண்டு காலங்களுக்கு இங்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது. அந்த வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒட்டன்சத்திரம் அரசு கலை அறிவியல் கல்லூரிக்கு கள்ளிமந்தையத்தில் ரூ .15 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டுவதற்கு கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. விருப்பாட்சியில் தொழிற்பயிற்சி கல்லூரி ரூ .7 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பில் பெண்கள் கல்லூரி கட்டடம் ரூ.68.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளது.

விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட்களை சேமித்து வைப்பதற்கு குளிர்சாதன கிடங்கு ரூ.5 கோடி மதிப்பீட்டில் ஒட்டன்சத்திரத்தில் கட்டுமான பணிகள் முடிவடைந்துள்ளது விரைவில் விவசாயிகளின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

ஒட்டன்சத்திரம் குழந்தை வேலப்பர் கோவில் மலைப் பாதையில் ரூ .15.00 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய கிரிவலப்பாதை அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கடந்த 2 ஆண்டுகளில் 1500 நியாய விலைக்கடைகள் பிரிக்கப்பட்டு புதியதாக முழு நேரம் மற்றும் பகுதி நேர நியாய விலைக்கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் மட்டும் 70 நியாய விலைக் கடைகள் பிரிக்கப்பட்டு புதிய கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**ஒட்டன்சத்திரத்தில் 300 கோயில்களுக்கு பணிகள்!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் தமிழகத்தில் 1000 திருக்கோயில்களில் திருக்குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் 300 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள தலா ரூ.2.00 இலட்சம் வீதம் ரூ.6.00 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ரூ.4000 கோடி மதிப்பீட்டில் 10,000 கிலோ மீட்டர் சாலைகளை சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இதில் அதிகபடியான நிதி திண்டுக்கல் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இன்றைய நிகழ்ச்சியில் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் 11,816 பயனாளிகளுக்கு ரூ.117.85 கோடி மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் பல்வேறு சாலை மேம்பாட்டு பணிகள் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், நமக்கு நாமே திட்டத்தில் சமுதாய கூடங்கள் கட்டுதல் என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன . 10 ஆண்டுகளில் நிறைவேற்றப்படாத திட்டங்கள் கடந்த 2 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதுபோன்ற அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எண்ணத்திற்கும், நம்பிக்கைக்கும் என்றும் ஆதரவு வழங்க வேண்டும் என உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் பேசினார்.

இவ்விழாவில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குர் திருமதி பெ.திலகவதி, பழனி வருவாய் கோட்டாட்சியர் சௌ.சரவணன், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி மு.அய்யம்மாள், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி இரா.சத்தியபுவனா ராஜேந்திரன், ஒட்டன்சத்திரம் நகர்மன்ற தலைவர் க.திருமலைச்சாமி, மாவட்ட ஊராட்சிக் குழு துணைத்தலைவர் கா. பொன்ராஜ், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர், பி.சி.தங்கம், ஒட்டன்சத்திரம் நகராட்சி துணைத்தலைவர் ப.வெள்ளைச்சாமி, கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் கோ.காந்திநாதன், மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் சு.இராமகிருஷ்ணன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் நா.சரவணன், வேளாண்மை இணை இயக்குநர் திருமதி அனுசுயா கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மரு . பெ.நா.இராம்நாத், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.அனிதா, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ஜோ.பெருமாள்சாமி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திருமதி முருகேஸ்வரி மாவட்ட வழங்கல் அலுவலர் சிவக்குமார், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு கழகம் மேலாளர் திருமதி மு.சுகன்யா, மாவட்ட சமூக நல அலுவலர் கோ. புஷ்பகலா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி பூங்கொடி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் நா.சிவக்குமார், வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழி காட்டு மையம் உதவி இயக்குநர் திருமதி பிரபாவதி தனித்துணை ஆட்சியர்(சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி கங்காதேவி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் என்.சாமிநாதன், மாவட்ட தொழில் மையம் பொது மேலாளர் கமலக்கண்ணன், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மாவட்ட செயல் அலுவலர் திருமதி பி.சுதாதேவி, துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# 13 மொழிகளில் வெளியான முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

## முதல் பக்கத் தொடர்ச்சி

**நெறியாளர்:** *வாட்ஸ்அப் போன்ற சமூகவலைதளங்களை பா.ஜ.க. தேர்தல் பிரச்சாரத்திற்காக பயன்படுத்தும் விதம் குறித்து வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இது காலத்திற்கேற்ப டிஜிட்டல் ஊடகங்களைக் கையாளும் வியூகமா அல்லது அதிகார அத்துமீறலா? இது பற்றிய உங்களின் கருத்து என்ன?*

**சோஷியல் மீடியாக்களில் பரப்பப்படும் பா.ஜ.க.வின் பொய்யுரைகளை முறியடிப்போம்!**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** ‘வாட்ஸ்அப் யுனிவர்சிட்டி’ என்பது பா.ஜ.க.வின் பொய்ப் பரப்புரைகளுக்குப் பொதுமக்கள் வைத்துள்ள பெயர். டிஜிட்டல் ஊடகங்கள், தொலைக்காட்சி ஊடகங்கள், அச்சு ஊடகங்கள் இவற்றில் ஊடுருவலையும் அதிகார பலத்தையும் பயன்படுத்துவது பா.ஜ.க. அரசின் வழக்கமாக இருக்கிறது. சமூக வலைதளங்களிலும் இத்தகையப் போக்குகள் நிலவுவதை வாஷிங்டன் போஸ்ட் வெளிப்படுத்தியுள்ளது. அதிகார அத்துமீறல்களை அம்பலப்படுத்துவதன் ஒரு கோணம்தான், சில ஊடக நெறியாளர்களின் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதில்லை என்கிற இந்தியா கூட்டணியின் புறக்கணிப்பு நடவடிக்கை.

பத்திரிகைகள் - மீடியாக்கள் நடுநிலைமைக்குத் திரும்ப வேண்டும் என்பதே இதன் நோக்கம்! மற்றபடி டிஜிட்டல் மீடியா, சோஷியல் மீடியா போன்றவற்றில் பா.ஜ.க.வின் அதிகார அத்துமீறல்களை, பொய்ப் பரப்புரைகளை, அவிழ்த்து விடும் அவதூறுகளை முறியடிக்கும் வகையில் இந்தியா கூட்டணிக் கட்சிகள் ஒருங்கிணைந்த செயல்திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

**நெறியாளர்:** *INDIA கூட்டணியின் தற்போதைய நிலை என்ன? கூட்டணியை ஒருங்கிணைக்கும் அல்லது இயக்கும் விசையாக எது உள்ளது?*

**பா.ஜ.க.வின் மக்கள் விரோதச் செயலே ‘இந்தியா’ கூட்டணியை ஒருங்கிணைக்கிறது!**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்: இந்தியக் கூட்டணி முதல் ரவுண்ட் வெற்றியைப் பெற்றிருக்கிறது. கர்நாடக மாநிலச் சட்டமன்றத் தேர்தல் உள்ளிட்ட இடைத்தேர்தல்களில் அந்த வெற்றி கிடைத்திருக்கிறது. பா.ஜ.க.வின் 9 ஆண்டுகால ஜனநாயக விரோத, அரசியல்சட்ட விரோத, மக்கள் விரோத ஆட்சியே இந்தியா கூட்டணியை ஒருங்கிணைத்திருக்கிறது. பா.ஜ.க.வுடன் இருக்கும் மற்ற நிழல் கூட்டணிகளான “அமலாக்கத்துறை” “வருமானவரித் துறை” போன்றவை மேலும் பல கட்சிகளை இந்தியா கூட்டணிக்கு வரவழைக்கும். அரசியல்சட்டமும் அதன் கொள்கைகளும், மக்களும்தான்தான் எங்கள் கூட்டணியை இயக்கும் விசை!**

**நெறியாளர்:** *கோயில்களின் கட்டுப்பாடு அறநிலையத்துறையிடம் இருப்பதை பிரதமர் நரேந்திர மோடி விமர்சித்துள்ளாரே! அவரின் குற்றச்சாட்டுகளை கவனித்தீர்களா? இதற்குத் தமிழ்நாடு அரசின் பதில் என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** தி.மு.க. ஆட்சிப்பொறுப்பேற்றபிறகு 1118 கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது. இந்து சமய அறநிலையத்துறைக்குச் சொந்தமான 5473 கோடி ரூபாய் மதிப்புள்ள 5820 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளது. இதனையெல்லாம் தெரிந்து கொள்ளாமல் பிரதமரும் பேசியிருக்கிறார். அதற்கு நான் ஏற்கெனவே பதில் அளித்துவிட்டேன்.

இன்றைக்கு பா.ஜ.க. ஆட்சியில் என்ன நடக்கிறது? தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மருத்துவமனையை கட்டித் தர இயலவில்லை. நீட் மசோதாவிற்கு ஒப்புதல் தர முடியவில்லை. மாநிலத்திற்கு உரிய நிதி உரிமை - மாநில உரிமையை வழங்குவதில்லை.

தமிழ்நாடு அரசுக்கு ஒத்துழைப்பு வழங்காமல், அரசியல் பேசி, அரசியல் சட்டப் பதவியான ஆளுநர் பதவியை அசிங்கப்படுத்திக் கொண்டிருக்கும் ஒருவரை ஆளுநராக வைத்து, தமிழ்மொழி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு- தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலை வாய்ப்பிற்கு முட்டுக்கட்டை போடப்படுகிறது!

தமிழ்நாட்டிற்கு 9 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் செய்த சாதனைகள் ஏதுமில்லை. சிறப்புத் திட்டங்கள் ஏதுமில்லை. ஆகவே ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு என்ன செய்துள்ளது என்பதைச் சொல்லி வாக்குச் சேகரிப்பதில் பிரதமருக்கு நெருடல் இருக்கிறது. தமிழ்நாட்டிற்கு என்ன செய்தோம் என்பதைச் சொல்ல இயலாத நிலையில்- பா.ஜ.க. அரசின் தோல்வியைத் திசைதிருப்பவே தமிழ்நாட்டில் சிறப்பாகக் கோவில் நிர்வாகத்தைச் செய்து கொண்டிருக்கும் இந்து சமய அறநிலையத்துறையை விமர்சிக்கிறார்.

**இன்றைக்கு பா.ஜ.க. ஆட்சியில் என்ன நடக்கிறது? தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மருத்துவ மனையை கட்டித் தர இயலவில்லை. நீட் மசோதாவிற்கு ஒப்புதல் தர முடியவில்லை. மாநிலத்திற்கு உரிய நிதி உரிமை-மாநில உரிமையை வழங்குவதில்லை.**

**தமிழ்நாடு அரசுக்கு ஒத்துழைப்பு வழங்காமல், அரசியல் பேசி, அரசியல்சட்டப் பதவியான ஆளுநர் பதவியை அசிங்கப்படுத்திக் கொண்டிருக்கும் ஒருவரை ஆளுநராக வைத்து, தமிழ் மொழி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு-தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலைவாய்ப்பிற்கு முட்டுக் கட்டை போடப்படுகிறது!**

**காவிரி உரிமை காப்பதில் உறுதியாக இருக்கும் எமது அரசு!**

**நெறியாளர் :** *நடப்பு ஆண்டில் காவிரி நீர்ப் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உருவெடுத்து உள்ளது. டெல்டா உழவர்களுக்கு இந்த ஆண்டிற்கான தீர்வு தான் என்ன? காவிரி விவகாரத்தில் அரசியல் ரீதியான தீர்வு சாத்தியமா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** அரசியல் ரீதியான தீர்வு கிடைக்கவில்லை என்பதற்காகவே காவிரி நடுவர் மன்றம் துவங்கப்பட்டு, இறுதித் தீர்ப்பு தரப்பட்டு, அது உச்சநீதிமன்றத்தில் இறுதியும் செய்யப்பட்டுள்ளது. உழவர்களுக்குப் பாசனத்திற்கு வேண்டிய நீர் கிடைக்கவே தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றம், காவிரி மேலாண்மை ஆணையம் ஆகியவற்றில் வலியுறுத்தி, இதுவரை தண்ணீரைப் பெற்று வருகிறது. காவிரியில் தமிழ்நாட்டு உழவர்களின் - தமிழ்நாட்டின் உரிமையை காப்பதில் எனது தலைமையிலான அரசு என்றும் உறுதியாக இருக்கும்.

**சாதிவாரி கணக்கெடுப்பு - ஒன்றிய அரசின் நிர்வாகப் பட்டியலில் வருகிறது!**

**நெறியாளர் :** *மக்கள் தொகைக் கணக்கெடுப்புடன் சாதிவாரிக் கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்த வேண்டும் எனப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நீங்கள் கடிதம் எழுதி உள்ளீர்கள்... ஒன்றிய அரசை எதிர்பார்க்காமல் மாநில அரசே நடத்த வேண்டும் என சில தலைவர்கள் கூறி உள்ளனர். இது சாத்தியமா? தமிழ்நாடு அரசு சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த வாய்ப்பு உள்ளதா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :** தமிழ்நாடு சமூகநீதி மண். இன்றைக்கு இந்தியாவில் 69 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் மண். சாதிவாரிக் கணக்கெடுப்பைப் பொறுத்தமட்டில், “சென்ஸஸ்” என்ற மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஒன்றிய அரசின் நிர்வாகப் பட்டியலில் இருக்கிறது. அதனால்தான் தி.மு.க.வும் பங்கேற்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் “சாதிவாரிக் கணக்கெடுப்பு” 2011இல் துவங்கப்பட்டது. அதற்குப் பிறகு வந்த பா.ஜ.க. அரசு அந்த கணக்கெடுப்பு முடிவை வெளியிடவில்லை. அமைச்சரவையிலேயே 2015இல் இதற்காக நிபுணர் குழு அமைத்தும் இன்று வரை சாதிவாரிக் கணக்கெடுப்பின் அந்த நிபுணர் குழு அறிக்கையையும் வெளியிடவில்லை.

மண்டல் கமிஷன் பரிந்துரை மூலம் எப்படி 27 விழுக்காடு இடஒதுக்கீடு இந்தியா முழுமைக்கும் உள்ள இளைஞர்களுக்கு ஒன்றிய அரசு வேலை வாய்ப்பு கல்வியில் இடஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்ததோ அது போல ஒன்றிய அரசு எடுக்கும் சாதிவாரிக் கணக்கெடுப்புதான் தமிழ்நாடு உள்பட இந்தியா முழுமைக்கும் சமூகநீதி கிடைக்க வழி வகுக்கும். ஆகவேதான் ஒன்றிய அரசு சாதிவாரிக் கணக்கெடுப்பை விரைந்து நடத்தி முடிக்க வேண்டும் என்று கடிதம் எழுதியிருக்கிறேன்.

**பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி குறித்து எங்களுக்கு கவலையில்லை!**

**நெறியாளர் :** *பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி உண்மையிலேயே முறிந்துவிட்டதா, இதனால் கூட்டணிக் கணக்குகளில் மாற்றம் ஏற்படுமா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்: சமீபத்தில் மற்ற மாநிலங்களில், பா.ஜ.க.வுடன் இருந்த கூட்டணியை ஒரு கட்சி முறித்துக் கொண்ட பிறகு நடந்த நிகழ்வுகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இப்போது அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி முறிவு காட்சியையும் பார்க்கிறீர்கள். ஆனால் உங்களுக்கே கூட்டணி முறிந்து விட்டதா இல்லையா என்ற சந்தேகம் எழுகிறது. அக்கூட்டணி முறிந்தாலும் முறியா விட்டாலும் எங்களுக்குக் கவலை இல்லை!**

**ஒன்றியத்தில் 9 ஆண்டுகாலம் பா.ஜ.க. ஆட்சியின் அலங்கோலங்களையும் தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆட்சியின் நிர்வாகச் சீர்கேடுகளையும் மக்கள் பார்த்திருக்கிறார்கள்.**

**இப்போது நல்லாட்சி தரும் தி.மு.க.வை, நல்ல பல மக்கள் திட்டங்களைத் தந்துள்ள இந்த ஆட்சியை, இந்தியாவே திரும்பிப் பார்க்கும் சாதனைகளை படைக்கும் தி.மு.க. ஆட்சியை தமிழ்நாட்டில் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.**

**நாங்கள் எங்கள் நல்லாட்சி மீது நம்பிக்கை வைத்து களத்திற்கு செல்கிறோம். 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியின் அலங்கோலங்களை இரண்டரை ஆண்டுகளில் மாற்றி, நிர்வாக எஞ்சினை நேர்த்தியாக செலுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே தி.மு.க.வின் நல்லாட்சி, தி.மு.க. கூட்டணிக் கட்சிகளின் நல்லெண்ணம் போன்றவற்றை அடிப்படையாக வைத்து நாங்கள் மக்களைச் சந்திக்கிறோம். மக்கள் எங்களுடன் இருக்கிறார்கள்!**

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

---

திருநெல்வேலி மாவட்டத்தில் மின்சாரம் தாக்கி

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக்.30

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், அயன்சிங்கம்பட்டி கிராமம், மடத்துத் தெரு பகுதியைச் சேர்ந்தபேச்சிமுத்து (வயது 55) மற்றும் பேரின்பராஜா ஆகிய இருவரும் நேற்று முன்தினம் (28.10.2023) இரவு ஜமீன்சிங்கப் பட்டியிலுள்ள தங்களது வயலுக்கு நீர் பாய்ச்ச வாய்க்காலில் இறங்கி மடையைத் திறக்க முயன்ற போது எதிர்பாராதவிதமாக விலங்குகள் வருவதை தடுப்பதற்கு அமைக்கப்பட்டிருந்த மின்சார வலையில் சிக்கி மின்சாரம் தாக்கி இருவரும் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு அவர்களது குடும்பத்தினருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

---

கூ.பீ.ஜெயின் தலைமை! 95 வது வட்டச் செயலாளர்

# மா.அகிலன் இல்ல விழா : அமைச்சர் பி.கே.சேகர்பாபு வாழ்த்துகிறார்!

## தயாநிதி மாறன் - அ.வெற்றிஅழகன் - ப.ரங்கநாதன் - வி.கௌதமன் பங்கேற்பு!

*சென்னை, அக். 30*

*சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி, 95 வது வட்டக் கழகச் செயலாளர் மா.அகிலன் இல்ல விழா இன்று (30.10.2023 திங்கட்கிழமை) மாலை 6.30 மணியளவில், ஐ.சி.எப். டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.*

*பகுதிச் செயலாளர் கூ. பீ.ஜெயின் எம்.சி. தலைமை வகிக்கிறார்.*

*சாவித்திரி வீரராகவன், வானவில் விஜய் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*மா.கபிலன், தே.தமிழ்வாணன், ஜிம்.முரளி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.*

*இவ்விழாவில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ப. ரங்கநாதன், வி.கௌதமன், வி.பி.ஜவஹர்பாபு ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.*

*இவ்விழாவில் வே.வாசு, ஐ.சி.எப்.வ.முரளிதரன், சதா தீனதயாளன், ஆர்.வரதன், டி.வி.செம்மொழி, லதா வாசு, ஜி.ஜெ.பிரபு, ஜெ.எஸ். பிரபு, வி.து.இராமமூர்த்தி, பா.இளையா, ம.கலைச்செல்வி, ஐ.சி.எப்.மு.சுரேஷ்பாபு, அனுசுயா பாண்டுரங்கன், மு.மோகரன், வி.து. குபேந்திரன், பா.ஜானி, சிட்கோ சேகர், க.சுகுமாறன்,*

*ஆர்.தீனதயாளன், சோ.முருகேசன், பல.லோகு பாபு, ஜே.தங்கராஜ் மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.*

---

பசும்பொன் - தேவர் திருமகன் நினைவிடத்தில் மரியாதை செலுத்த சென்னையிலிருந்து நேற்றிரவு

# முதல்வர் மு.க.ஸ்டாலின் விமானம் மூலம் புறப்பட்டார்!

## மதுரையில் இன்று மருதுபாண்டியர் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவிக்கிறார்!

**மதுரை, அக். 30 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பசும்பொன் தேவர் திருமகனார் அவர்களின் குருபூஜை நிகழ்ச்சியில் பங்கேற்கவும் - தேவர் திருமகனார் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்திடவும், நேற்று மாலை, சென்னையில் இருந்து மதுரைக்கு விமானம் மூலம் சென்றடைந்தார்.**

விமான நிலையத்தில் கழகத்தினர் பெருமளவில் திரண்டிருந்து முதல்வருக்கு எழுச்சிமிகு வரவேற்பளித்தனர்.

**பசும்பொன் தேவர் திருமகனார் அவர்களின் குரு பூஜை இன்று!**

இந்நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் அரசின் சார்பில், பசும்பொன் தேவர் திருமகனார் நினைவிட முகப்பில் பொதுமக்கள் பாதுகாப்பாக மரியாதை செலுத்தும் வகையில், ரூ.1 கோடியே 42 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பீட்டில் ஒரு மண்டபமும், மிக முக்கியப் பிரமுகர்கள் மரியாதை செலுத்தும் பாதையில் ரூ.12, லட்சத்து 54 ஆயிரம் மதிப்பீட்டில் மற்றொரு மண்டபமும் அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டதும் - அதற்கு தென் மண்டல மாவட்டங்களைச் சேர்ந்தோர் ஒரு முகமாக முதல்வருக்கு நன்றி தெரிவித்ததும் அறிவோம்!

இந்நிலையில், தேவர் திருமகனார் அவர்களின் குரு பூஜை நாளில், தேவர் திருமகனார் நினைவிடத்தில் மரியாதை செலுத்துவதை வழக்கமாகக் கொண்ட முதல்வர் அவர்கள், இன்று பசும்பொன்னில் நடைபெறும் குரு பூஜை நிகழ்வில் பங்கேற்க, நேற்று இரவு 8.00மணி அளவில் சென்னையிலிருந்து விமானம் மூலம் மதுரைக்குப் புறப்பட்டார்.

இரவு 9.00 மணியளவில் மதுரை விமான நிலையம் வந்திறங்கிய கழகத் தலைவர் - முதல்வர் அவர்களுக்கு, விமான நிலையத்தில் அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற - நாடாளுமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், முன்னோடிகள், தோழர்கள் என ஏராளமானோர் திரண்டு வந்து உற்சாகம் பொங்க வரவேற்பளித்தனர்.

அவ்வரவேற்பினை ஏற்றுக் கொண்டு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அங்கிருந்து புறப்பட்டு மதுரை -சர்க்யூட் ஹவுஸ் சென்று இரவு அங்கு தங்கினார்.

இன்று காலை 7.15 மணியளவில் மதுரை - கோரிப்பாளையத்தில் பசும்பொன் தேவர் திருமகனார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

அதன்பின்னர், மதுரை, மானகிரி, ஆவின் சந்திப்பு 2வது நுழைவாயில் அருகில் புதிதாக கட்டப்படவுள்ள கோரிப்பாளையம் சந்திப்பு மேம்பாலம் மற்றும் மதுரை தொண்டி சாலையில், சாலை மேம்பால கட்டுமானப் பணி ஆகியவற்றைத் தொடங்கி வைக்கிறார்.

அதனைத்தொடர்ந்து, மதுரை, தெப்பக்குளம் பகுதியில் அமைந்துள்ள மருது சகோதரர்களின் திருவுருவச் சிலைகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டபின், இராமநாதபுரம் மாவட்டம் செல்லும் முதலமைச்சர் அவர்கள் பசும்பொன்னில் அமைந்துள்ள முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்திற்குச் சென்று, தேவர் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்துகிறார்.

# தஞ்சை வடக்கு மாவட்ட கழக செயலாளர் சு.கல்யாணசுந்தரம் M.P. அவர்களின் அறிவிப்பு



## தஞ்சை வடக்கு மாவட்டம் - 2024 நாடாளுமன்ற தேர்தல் பணி மற்றும் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் குழு

கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி தஞ்சை வடக்கு மாவட்டத்தில் உள்ள திருவிடைமருதூர், கும்பகோணம், பாபநாசம் ஆகிய சட்டமன்ற தொகுதிகள் வாரியாக நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி முகவர்கள், பூத்கமிட்டி உறுப்பினர்கள், ஆகியோர்களை கண்காணிப்பதற்கும், நேரில் சந்தித்து வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும்பணியை மேற்கொள்வதற்கும், அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழக செயலாளர்கள் தலைமையில் தொகுதி பார்வையாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநகர செயலாளர் முன்னிலையில் மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் கீழ்கண்ட பட்டியல்படி ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழகத்திற்கு கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

### தொகுதி பார்வையாளர்கள்

| 170-திருவிடைமருதூர் தொகுதி | 171-கும்பகோணம் தொகுதி | 172-பாபநாசம் தொகுதி |
|---|---|---|
| **எஸ்.கே.வேதரத்தினம்**<br>மாநில விவசாய அணி துணைத்தலைவர் | **வண்ணை அரங்கநாதன்**<br>மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் | **உ.மதிவாணன், பி.ஏ., பி.எல்.,**<br>மாநில விவசாய தொழிலாளர் அணி தலைவர் |

| திருவிடைமருதூர் தொகுதி | கும்பகோணம் தொகுதி | பாபநாசம் தொகுதி | குடந்தை மாநகரம் |
|---|---|---|---|
| **செ.ராமலிங்கம் MP**<br>தலைமை செயற்குழு உறுப்பினர்<br>**கோவி.செழியன்**<br>அரசு தலைமை கொறடா<br>தலைமை செயற்குழு உறுப்பினர்<br>**க.நசீர் முஹம்மது**<br>மாவட்ட அவைத்தலைவர் - 9443324430 | **க.அன்பழகன் MLA**<br>தலைமை செயற்குழு உறுப்பினர்<br>**ஜெ.நடராஜன்**<br>மாவட்ட பொருளாளர்<br>9894624974<br>**குட்டி.இரா.தெட்சினாமூர்த்தி**<br>தலைமை செயற்குழு உறுப்பினர் | **மு.சண்முகம் MP**<br>தொ.மு.ச பொதுச்செயலாளர்<br>மாவட்ட கழக து.செயலாளர்கள்<br>**கோ.வி.அய்யாராசு**<br>9443806213<br>**S.துரை முருகன்**<br>9025256200 | **சு.ப.தமிழழகன்**<br>மாநகர கழக செயலாளர்<br>9443086522<br>மாவட்ட கழக அலுவலகம்<br>**க.செந்தில்குமார்**<br>மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்<br>9566633331 |

| ஒன்றியம் / பேரூர் / பகுதி | தலைமை ஒன்றியம் / பேரூர் / பகுதி செயலாளர் | தொகுதி | பூத் எண்ணிக்கை | கிளை எண்ணிக்கை | கண்காணிப்பு குழு பெயர் | பொறுப்பு | செல் |
|---|---|---|---|---|---|---|---|
| **திருப்பனந்தாள் மத்திய ஒன்றியம்** | R.உதயச்சந்திரன் | 170 - திருவிடைமருதூர் தொகுதி | 30 | 103 | வை.வினோத்குமார் | அமைப்பாளர், வி.தொழிலாளர் அணி | 9843687587 |
| | | | | | எம்.வேணுகோபால் | தலைவர், வி.தொழிலாளர் அணி | 9952285750 |
| | | | | | சி.சங்கர் | துணை தலைவர், வி.தொழிலாளர் அணி | 9994836616 |
| **திருப்பனந்தாள் மேற்கு ஒன்றியம்** | கோ.க.அண்ணாதுரை | | 32 | 105 | G.K.M.ராஜா | அமைப்பாளர், இளைஞர் அணி | 9677494949 |
| | | | | | T.V.S.சிலம்பரசன் | துணை அமைப்பாளர், இளைஞர் அணி | 9787564943 |
| **திருப்பனந்தாள் பேரூர்** | T.M.சப்பாணி | | 9 | 15 | க.மதியழகன் | துணை அமைப்பாளர், கலை இலக்கிய அணி | 8903879767 |
| **திருப்பனந்தாள் கிழக்கு ஒன்றியம்** | மிசா.M.மனோகரன் | | 37 | 105 | P.ரவிச்சந்திரன் | அமைப்பாளர், விவசாய அணி | 9842447018 |
| | | | | | தி.துரை | தலைவர், விவசாய அணி | 9442635435 |
| | | | | | V.V.நடராஜன் | துணை தலைவர், விவசாய அணி | 9445772066 |
| **திருவிடைமருதூர் வடக்கு ஒன்றியம்** | செ.ராமலிங்கம் MP | | 69 | 123 | சே.வெங்கடேசன் | துணை அமைப்பாளர், இளைஞர் அணி | 9443155601 |
| | | | | | சன்.செள.ஸ்டாலின் | துணை அமைப்பாளர், இளைஞர் அணி | 7397630764 |
| | | | | | S.M.மணிகண்டன் | துணை அமைப்பாளர், இளைஞர் அணி | 9500769771 |
| | | | | | D.விஜய் பிரசாத் | துணை அமைப்பாளர், இளைஞர் அணி | 9790076726 |
| **ஆடுதுறை பேரூர்** | கோ.சி.இளங்கோவன் | | 44 | 60 | இராஜா.இரகுபதி | அமைப்பாளர், பொறியாளர் அணி | 9750977711 |
| **திருவிடைமருதூர் பேரூர்** | சுந்தர.ஜெயபால் | | | | ஜெ.சம்பத்குமார் | துணை அமைப்பாளர், பொறியாளர் அணி | 9941216838 |
| **வேப்பத்தூர் பேரூர்** | V.மகாலிங்கம் | | | | A.வள்ளிகண்ணன், | துணை அமைப்பாளர், பொறியாளர் அணி | 9442166688 |
| **திருபுவனம் பேரூர்** | எஸ்.கே.பஞ்சநாதன் | | | | ஆர்.சக்திவேல் | துணை அமைப்பாளர், பொறியாளர் அணி | 7845377046 |
| **திருவிடைமருதூர் தெற்கு ஒன்றியம்** | C.அம்பிகாபதி | | 57 | 171 | தம்பி தேவரத்தினம் | மு.மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் | 9894627237 |
| | | | | | R.F.இஸ்ரேல் | துணை அமைப்பாளர், சிறுபான்மை அணி | 9943193462 |
| | | | | | செள.தேவராஜ் | துணை அமைப்பாளர், மாணவர் அணி | 9092928940 |
| | | | | | மு.உதயகுமார் | துணை அமைப்பாளர், ஐ.டி. விங்க் | 9360219153 |
| **கும்பகோணம் கிழக்கு ஒன்றியம்** (திருவிடைமருதூர் தொகுதி) | J.சுதாகர் | | 12 | 32 | மு.ரகு | துணை அமைப்பாளர், வர்த்தகர் அணி | 7010575866 |
| **கும்பகோணம் கிழக்கு ஒன்றியம்** | J.சுதாகர் | 171 – கும்பகோணம் தொகுதி | 26 | 100 | R.முருகன் | அமைப்பாளர், வர்த்தகர் அணி | 9942075252 |
| | | | | | S.G.ராஜன் | தலைவர், வர்த்தகர் அணி | 9443395925 |
| **சோழபுரம் பேரூர்** | J.ஜபுருதீன் | | 7 | 15 | பு.காளிதாஸ் | துணை அமைப்பாளர், ஐ.டி. விங்க் | 9840052626 |
| **கும்பகோணம் மத்தியம் ஒன்றியம்** | T.கணேசன் | | 79 | 124 | V.சிவக்குமார் | அமைப்பாளர், விளையாட்டு மேம்பாட்டு அணி | 9443126565 |
| | | | | | R.வசந்தராஜ் | து. அமைப்பாளர், விளையாட்டு மேம்பாட்டு அணி | 9629816198 |
| | | | | | S.ஸ்டாலின் | து. அமைப்பாளர், விளையாட்டு மேம்பாட்டு அணி | 8098818575 |
| **திருநாகேஸ்வரம் பேரூர்** | சீ.தாமரைச்செல்வன் | | 14 | 15 | சுபா திருநாவுக்கரசு | அமைப்பாளர், மகளிர் அணி | 6383534829 |
| **கும்பகோணம் மாநகரம் பகுதி – 1** | இரா.செல்வராஜ் | | 34 | 12 வார்டுகள் | ப.புகழேந்தி | அமைப்பாளர், மீனவர் அணி | 7539908311 |
| | | | | | M.யோகாநந்தம் | தலைவர், மீனவர் அணி | 9442741826 |
| **கும்பகோணம் மாநகரம் பகுதி – 2** | இரா.கல்யாணசுந்தரம் | | 30 | 12 வார்டுகள் | A.சுந்தரமூர்த்தி | அமைப்பாளர், அயலக அணி | 9944555554 |
| | | | | | A.சாதிக் பாட்சா | துணை அமைப்பாளர், அயலக அணி | 9677382998 |
| **கும்பகோணம் மாநகரம் பகுதி – 3** | T.V.கிருஷ்ணமூர்த்தி | | 33 | 12 வார்டுகள் | V.செல்வராஜ் | அமைப்பாளர், தொழிலாளர் அணி | 9442431188 |
| | | | | | S.பாரி | தலைவர், தொழிலாளர் அணி | 9443712741 |
| **கும்பகோணம் மாநகரம் பகுதி – 4** | மு.கண்ணன் | | 32 | 12 வார்டுகள் | K.செல்வமுத்துகுமரன் | அமைப்பாளர், சுற்றுசூழல் அணி | 9787226050 |
| | | | | | G.மணிவர்மன் | துணை தலைவர், சுற்றுசூழல் அணி | 9442459388 |
| **கும்பகோணம் மேற்கு** (கும்பகோணம் தொகுதி) | சு.க.முத்துசெல்வம் | | 40 | 116 | கோ.மாரியப்பன் | அமைப்பாளர், இலக்கிய அணி | 8524923168 |
| | | | | | க.அண்ணாதுரை | துணைத்தலைவர், இலக்கிய அணி | 9443402850 |
| **கும்பகோணம் மேற்கு** (பாபநாசம் தொகுதி) | சு.க.முத்துசெல்வம் | 172 – பாபநாசம் தொகுதி | 23 | 37 | G.R.பிரகாஷ் | துணை அமைப்பாளர், இலக்கிய அணி | 9842095110 |
| | | | | | G.பாலாஜி | துணை அமைப்பாளர், இலக்கிய அணி | 9790590129 |
| **சுவாமிமலை பேரூர்** | S.பாலசுப்ரமணியம் | | 7 | 15 | R.ராஜேஷ் | துணை அமைப்பாளர், மாணவர் அணி | 9994383759 |
| **பாபநாசம் தெற்கு ஒன்றியம்** | N.நாசர் | | 58 | 131 | மு.கோபிநாத் | அமைப்பாளர், ஆதிதிராவிடர் அணி | 9965085851 |
| | | | | | அ.செல்வராஜ் | தலைவர், ஆதிதிராவிடர் அணி | 9940935703 |
| **பாபநாசம் பேரூர்** | ச.கபிலன் | | 14 | 15 | லண்டன் குணா | துணை தலைவர், வர்த்தகர் அணி | 9789355967 |
| **பாபநாசம் வடக்கு ஒன்றியம்** | கோ.தாமரைச்செல்வன் | | 57 | 159 | ஆர்.லெட்சுமணன் | அமைப்பாளர், அ.சா.ஓட்டுநர் அணி | 9443122481 |
| | | | | | நா.மலர்மன்னன் | தலைவர், அ.சா.ஓட்டுநர் அணி | 9443378993 |
| | | | | | முகம்மது கலிபா | துணைத்தலைவர், அ.சா.ஓட்டுநர் அணி | 7397536124 |
| **அய்யம்பேட்டை பேரூர்** | T.P.T.துளசி அய்யா | | 14 | 15 | K.வினோத்குமார் | துணை அமைப்பாளர், மாணவர் அணி | 9626383809 |
| **அம்மாபேட்டை வடக்கு ஒன்றியம்** | தியாக.சுரேஷ்குமார் | | 51 | 129 | D.R.அனந்தராமன் | அமைப்பாளர், நெசவாளர் அணி | 9894046069 |
| | | | | | V.S.மோகன் | தலைவர், நெசவாளர் அணி | 9994235820 |
| | | | | | K.சங்கர் | துணைத்தலைவர், நெசவாளர் அணி | 9994384719 |
| **மெலட்டூர் பேரூர்** | V.சீனிவாசன் | | 8 | 15 | தமிமுல் அன்சாரி | துணைத்தலைவர், சிறுபான்மை அணி | 9894671425 |
| **அம்மாபேட்டை பேரூர்** | தியாக.ரமேஷ் | | 12 | 15 | M.முபாரக் ஹுசைன் | துணை அமைப்பாளர், கலை இலக்கிய அணி | 9488110448 |
| **அம்மாபேட்டை தெற்கு ஒன்றியம்** | P.S.குமார் | | 51 | 99 | தா.அனிபா | அமைப்பாளர், சிறுபான்மை அணி | 9944886544 |
| | | | | | N.A.M.யூசுப்அலி | தலைவர், சிறுபான்மை அணி | 9443463786 |
| | | | | | H.ராயல் அலி | துணை அமைப்பாளர், சிறுபான்மை அணி | 9944885548 |

மாவட்ட கழகம் சார்பில் நியமிக்கப்பட்ட பணிக்குழுவில் உள்ள மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத்தலைவர்கள், தங்கள் அணியின் துணை அமைப்பாளர்களுடன் இணைந்து அந்தந்த வாக்குச்சாவடிக்கு நேரில் சென்று பூத் நிர்வாகிகள் (பி.எல்.சி), பி.எல்.ஏ-2 ஆகியோர்களுடன் நேரில் கள ஆய்வு செய்து 01.01.2024 அன்று 18 வயது நிறைவடையும் புதிய இளம் வாக்காளர்களை கண்டறிந்து அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க தேவையான ஆவணங்கள், மார்பளவு புகைப்படம் ஆகியவற்றை தயார் நிலையில் வைக்க ஆயத்தப்படுத்துவதுடன், முகாம் நடைபெறும் நாளான நவம்பர் 4, 5, 18, 19 ஆகிய தேதிகளில் அவர்களை முகாமிற்கு நேரில் சம்மந்தப்பட்ட வாக்குச்சாவடிக்கு அழைத்துச்சென்று அவர்கள் பதிவினை உறுதி செய்வதுடன், முகாம் நடைபெறும் நாட்களில் வாக்குச்சாடிக்குச் சென்று படிவம்-6, 6ஏ, 7, 8 போன்ற மனுக்களின் விபரங்கள் சேகரிப்பதுடன் அன்றைய தேதியில் நமது கழகத்திற்கு ஆதரவு நபர்கள் எத்தனை பேர், புதியதாக வாக்காளர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்ற தகவலை தலைமைக்கு அனுப்ப ஏதுவாக மாவட்ட கழக அலுவலகத்திடம் ஒப்படைப்பதற்கு பட்டியல் தயார் செய்து அனுப்புவதுடன் முகாம் முடிவுற்றால் மேற்கண்ட தேர்தல் பணிகளை தொடர்ந்து செய்து புதிய வாக்களர் சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களிலோ, வாக்காளர் சேகரிப்பதற்கான தாசில்தார் அலுவலகத்திலோ, மனு கொடுக்கும் கால அவகாசம் 27.10.2023 முதல் 12.12.2023 வரை கொடுக்கலாம். எனவே, நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக இப்பணியில் ஈடுபடுத்திக்கொண்டு இந்த பணியின் விபரத்தினை மாவட்ட கழக அலுவலகத்தில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க**

**சு.கல்யாணசுந்தரம் M.P.**
மாவட்ட கழக செயலாளர்


நாள் : 30.10.2023
இடம் : பசும்பொன், ராமநாதபுரம்.
தெய்வத்திருமகன் பசும்பொன்
முத்துராமலிங்க தேவர்
குரு பூஜை
தமிழகத்தின்
வெற்றித் திருமகன்
திராவிட நாயகனே!
வருக! வருக!!
ARASU ARTS
அன்புடன் : கே.ஆர்.பெரியகருப்பன்
கூட்டுறவுத் துறை அமைச்சர் – மாவட்டச் செயலாளர்
சிவகங்கை மாவட்ட தி.மு.க.



மதுரை மாநகரில்
30.10.2023
கோரிப்பாளையம் -
வைகை ஆறு
உயர்மட்ட மேம்பாலம்
₹ 190.4 கோடியில்
தொண்டிசாலையில்
மேலமடை சந்திப்பில்
உயர்மட்ட மேம்பாலம்
₹ 150.28 கோடி
மதிப்பீட்டில் அடிக்கல்
நாட்ட வருகை தரும்
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் தலைவர் அவர்களே
வருக! வருக!
என அன்புடன் வரவேற்கிறோம்...
கோ.தளபதி MLA
மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர்
வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
மாண்புமிகு P.மூர்த்தி
வணிகவரி மற்றும் பத்திரபதிவுத்துறை அமைச்சர்
மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர்
M.மணிமாறன்
மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர்


கலைஞர்
100
1924 - 2023
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் 116வது ஜெயந்தி விழா
மாமன்னர் மருதுபாண்டியர்களின் 222வது குருபூஜை விழாவிற்கு வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களை வருக வருக என வரவேற்கிறோம்
இவண்
பி. மூர்த்தி
வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்
மதுரை வடக்கு மாவட்ட செயலாளர்
கோ.தளபதி
சட்டமன்ற உறுப்பினர்
மதுரை மாநகர் மாவட்ட செயலாளர்
மு.மணிமாறன்
செயலாளர்
மதுரை தெற்கு மாவட்ட திமுக

# அரசு ஊழியர் - ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பல்வேறு சங்கங்கள் நன்றி!


















தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (28.10.2023) தலைமைச் செயலகத்தில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 1.7.2023 முதல் 4 சதவிகித அகவிலைப்படியை உயர்த்தி வழங்கியமைக்காக பல்வேறு அரசு அலுவலர்கள் சங்கங்கள், அரசு பணியாளர்கள் சங்கங்கள், ஓட்டுநர் சங்கங்கள், தொழிலாளர்கள் சங்கங்கள், போக்குவரத்து கழக சங்கங்கள், செவிலியர் சங்கம் மற்றும் பல்வேறு ஆசிரியர்கள் சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து தங்களது நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தமிழ்நாடு முழுவதும் 10 வாரங்கள் நடைபெற உள்ள 10 ஆயிரம் மழைக்கால சிறப்பு முகாம்களைத் தொடங்கி வைக்கும் விதமாக, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு138க்குட்பட்ட எம்.ஜி.ஆர். நகர் மார்க்கெட் பகுதியில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினை நேற்று (29.10.2023) தொடங்கி வைத்து, பொதுமக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா (விருகம்பாக்கம்), கா.கணபதி (மதுரவாயல்), கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், நிலைக்குழுத் தலைவர் (கணக்கு) க.தனசேகரன், மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மருத்துவர் டி.சி.செல்வவிநாயகம், மாமன்ற உறுப்பினர் கண்ணன் உட்பட பலர் உடனிருந்தனர்.



மும்பையில் நடைபெற்ற உலகளாவிய முதலீட்டாளர்கள் சந்திப்பில் (டி.என்.ஜி.ஐ.எம்.) 2024– வணிகத் தகவல்கள் முதலீட்டாளர்கள், மற்றும் வர்த்தக பிரதிநிதிகளுடன் தமிழ்நாடு தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா உரையாற்றினார்.

ரேடியல் சாலையில் தனியார் நிறுவனத்தை திறந்து வைக்க வருகை தரும்

## முதல்வர் - தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு பல்லவபுரத்தில் உற்சாக வரவேற்பு!

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத்தினருக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், அக். 30 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பல்லவபுரம் - துரைப்பாக்கம் 200 அடி ரேடியல் சாலையில் 'கேபிடேள் லேண்ட் டெக்னோ பார்க்'' என்ற தனியார் நிறுவனம் திறப்பு விழா நாளை 31.10.2023 காலை 11 மணி அளவில் நடைபெறுகிறது.

நாம் நாளும்போற்றி வணங்கும் நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் தமிழ்நாடு முதல் அமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இப்புதிய நிறுவனத்தை திறந்து வைக்கிறார்.



இப்புதிய நிறுவனத்தை திறந்து வைக்க வருகை தரும் நம்முடைய ஒப்பாரும் மிக்காரும் இலா அன்புத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு நாளை (31. ஆம் தேதி காலை 10.00 மணியளவில் கழகத்தினர் ஆயிரக்கணக்கில் திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மாவட்டக் கழக நிர்வாகிகள், கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - பகுதி - ஒன்றிய - பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில, மாவட்ட நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தமது கரங்களில் கழகக் கொடியேந்தி அலைகடலெனத் திரண்டு வந்து எழுச்சியான முறையில் வரவேற்பு அளிக்க வேண்டுகிறேன்.

பல்லவபுரத்திற்கு வருகை தரும் மக்கள்போற்றி பாராட்டும், வகையில் நல்லாட்சி நடத்தி வரும் நம்முடைய முதல்வர் - தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வரவேற்பு அளிப்பது நமது கடமை, நமது உரிமை என்ற அந்த உணர்வோடு, கழகத்தினரும், பொதுமக்களும், அணி திரண்டு உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

எனவே மாவட்டம், முழுவதிலும் இருந்து கழகததினர் அனைவரும் பல்லவபுரம் பேருந்து நிலையம் அருகில் நாளை 31 ஆம் தேதி காலை 9.30 மணிக்கெல்லாம் வந்து குவிந்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

ஏ.எம்.வி.பிரபாகர ராஜா எம்.எல்.ஏ. - க.தனசேகரன் எம்.சி. - கன்னிகை ஜி.ஸ்டாலின் பங்கேற்பு!

## கலைஞர் நகர் தெற்குப் பகுதி - வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் கே.கண்ணன் அறிக்கை!

சென்னை, அக்.30-

கலைஞர் நகர் தெற்குப் பகுதிச் செயலாளர் கே.கண்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

அமைச்சரும், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்ரமணியன் ஆலோசனைபடி, விருகம்பாக்கம் தொகுதி, கலைஞர் நகர் தெற்கு பகுதி வட்ட செயலாளர்கள் கூட்டம் நாளை (31.10.2023 -செவ்வாய்க் கிழமை) மாலை 6.30 மணியளவில், கலைஞர்நகர் தெற்குப் பகுதி அலுவலகத்தில் பகுதி அவைத்தலைவர் எஸ்.உமாபதி தலைமையில் நடைபெறுகிறது.

விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, கணக்கு நிலைகுழு தலைவர் க.தனசேகரன், தொகுதி பொறுப்பாளர் கன்னிகை ஜி. ஸ்டாலின் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு பகுதிச் செயலாளர் கே.கண்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மதுரை, திருநெல்வேலி, திருச்சி மற்றும் விருதுநகர் கோட்டங்களைச் சேர்ந்த வணிகர்களுக்கு

## சமாதானம் திட்டம் - 2023 விழிப்புணர்வு - திட்ட விளக்கக் கூட்டம்!

### வணிகவரி - பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெறுகிறது!

சென்னை, அக். 30-

2023ஆம் ஆண்டு, தமிழ்நாடு வரிகள் (நிலுவைகள் தீர்வு செய்தல்) தொடர்பான சமாதான திட்டத்தின் சிறப்பியல்புகளை வணிகர்களுக்கு விளக்கும் வகையில்,

வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், அரசு செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை , திருமதி. பா.ஜோதி நிர்மலாசாமி, வணிகவரித்துறை ஆணையர், முனைவர் டி. ஜகந்நாதன் மற்றும் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொள்ளும், சமாதானம் திட்டம் 2023



விழிப்புணர்வு மற்றும் திட்ட விளக்க கூட்டம்:-

மதுரை, திருநெல்வேலி, திருச்சி மற்றும் விருதுநகர் கோட்டங்களை சார்ந்த வணிகர்களுக்கு 31.10.2023 செவ்வாய்க்கிழமை அன்று முற்பகல் 10.00 மணி அளவில் மதுரையில் உள்ள துவாரகா பேலஸ் அரங்கிலும், ( Dwarka Palace, பாண்டி கோவில் அருகில்)

சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு), சென்னை (மத்தியம்), காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், வேலூர் மற்றும் கடலூர் கோட்டத்தை சார்ந்த வணிகர்களுக்கு 06.11.2023 திங்கட்கிழமை அன்று முற்பகல் 10.00 மணி அளவில் சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கிலும் ,

கோயம்புத்துர், சேலம், ஈரோடு, திருப்பூர் மற்றும் ஓசூர் கோட்டத்தைச் சார்ந்த வணிகர்களுக்கு 07.11.2023 செவ்வாய்க்கிழமை அன்று முற்பகல் 10.00 மணி அளவில் கோயம்புத்தூரில் உள்ள ஆர். எஸ்.புரம் மாநகராட்சி கலையரங்கிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சமாதானத் திட்டத்தின் கீழ் பயனடைய உள்ள சம்பந்தப்பட்ட பகுதிகளைச் சார்ந்த வணிகர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு வணிகவரித்துறை சார்பாக கேட்டுக்கொள்ளப் படுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞரோடு பயணித்தவர்களின் அனுபவமும் - கலைஞரை நினைவு கூருதலும்! மயிலை கிழக்குப் பகுதி சார்பில்

## சென்னை - அன்பகத்தில் - ஆ.இராசா எம்.பி. சிறப்புரை!

### தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - மயிலை த.வேலு எம்.எல்.ஏ. பங்கேற்பு! நந்தனம் மதி எம்.சி. தலைமை!

சென்னை, அக்.30-

சென்னை - அன்பகத்தில் இன்று (30-10-2023) மாலை 6 மணியளவில் சென்னை தென் மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் கலைஞரோடு நான் (கலைஞரோடு பயணித்தவர்களின் அனுபவமும் அவரின் நினைவு கூருதலும்) நிகழ்ச்சி மயிலை மேற்குப் பகுதிச் செயலாளர் நந்தனம் மதி எம்.சி. (எனது) தலைமையில் சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., முன்னிலையில் ஜி. ஆர்.இராஜேந்திரன், ஆர். எல்.வி.அசோக்குமார், பா. பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன், ஜி.முருகையன் ஆகியோர் வரவேற்பில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடனான தமது அனுபவத்தை கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம். பி. பகிர்ந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ஜெ.கருணநிதி எம்.எல்.ஏ., தி.நகர் கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, மயிலை கிழக்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., தி. நகர் மேற்கு பகுதி செயலாளர், வட்ட கழக செயலாளர்கள் எஸ்.ஆர்.ராஜா, சுரேஷ் குமார், ஆ.நாகராஜன், டி.ராஜவேலு, சீ. கிருஷ்ணமூர்த்தி, மூ.இ.ஏழுமலை, மூ.இராஜேந்திரன், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் மாநில, மாவட்ட, பகுதி, வட்ட, அனைத்து அணிகளின் கிழக்கு / மேற்கு அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் அனைத்து நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பகுதிச் செயலாளர் நந்தனம் மதி எம்.சி., கேட்டுக் கொண்டுள்ளார்.

புழல் எம் நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

## மாதவரம் வடக்கு பகுதி பாக முகவர்கள் - பாக உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாதவரம் எஸ் சுதர்சனம் தலைமையில் கலாநிதி வீராசாமி - கே .பி. சங்கர் - நா. சந்திரபாபு சிறப்புரையாற்றினார்கள்!

சென்னை,அக்.30-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பாக முகவர்கள் கூட்டம் 29 10 2023 ஞாயிறு காலை 10 மணிக்கு மாத்தூர் 19வது வட்டம் பிரவீன் மஹாலில் நடைபெற்றது

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம் நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ் சுதர்சனம் எம்எல்ஏ தலைமை தாங்கி ஆலோசனைகளை வழங்கினார்

வட்டச் செயலாளர்கள் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் கே அங்குசாமி இ கண்ணப்பன் கே கருணாகரன் பி எஸ் சந்துரு வி ரா குப்பன் ஆகியோர் வரவேற்றனர்

இந்த கூட்டத்தில் வருகின்ற ஐந்தாம் தேதி திருவள்ளூரில் நடைபெறுகின்ற மண்டல பாக முகவர்கள் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு க ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுவதை நேரடியாக பாக முகவர்களை அழைத்துக் கொண்டு சிறப்பிப்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி நீட் தேர்வை கண்டித்து கையெழுத்து இயக்கத்தை விரைவாக நடத்தி முடிப்பது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

இக்கூட்டத்தில் மருத்துவர் கலாநிதி வீராசாமி எம்பி திருவெற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கேபி சங்கர் மாதவரம் தொகுதி பார்வையாளர் நா சந்திரபாபு தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மிசா பா மதிவாணன் வி ராமநாதன் மாவட்ட துணைச் செயலாளர்கள் டி ராமகிருஷ்ணன் அறிவழகி பாலகிருஷ்ணன் பகுதி கழக நிர்வாகிகள் வி திராவிட வீரன் க சிவசங்கரன் அ ராஜேந்திரன் பி நிர்மல் குமார் சே செல்வன் நா மோகன் குமார் நாகூரார் பா சந்திரன் கே ராஜா அம்மு மூர்த்தி அணிகளின் துணை அமைப்பாளர்கள் எஸ் கோபாலகிருஷ்ணன் கே ஏழுமலை எச் பீர்முகமது எஸ். சிவகுமார் சி அருணாசலம் கே. சண்முகப்பிரியன் எஸ் உதயகுமார் வெங்கடேசன் பேன்சி ரமேஷ் டி வினோத் ஜி ராஜ்குமார் பா கோபிநாத் அமுதா மணிராஜ் எஸ் கலைச்செல்வி ஆர் சுதா எஸ் சுதா காஞ்சனா மோகன் ஜா யுவராணி பி ஜெயராஜ் துரைதசரதன் எம் என் அஜய் தென்னவன் த விக்னேஸ்வரன் என் பிரபு 15வது வட்டக் கழக நிர்வாகிகள் ராஜேந்திரன் பி டி ரவிச்சந்திரன் ஆ பக்தவச்சலம் இ எம் மனோகரன் கா கண்ணன் பாஸ்கர் ஜனார்தன் பதினாறாவது வட்ட நிர்வாகிகள் வெங்கடேசன் என் பரசுராமன் எம் புவனேஸ்வரி மகேஷ்குமார் இ குமரவேல் கே ஏ ரமேஷ் 17 வது வட்ட நிர்வாகிகள் சி பாலாஜி வி பார்த்தசாரதி சி மூர்த்தி 19வது வட்ட நிர்வாகிகள் கோ. சரவணன் அ திருமலை நான் ரகுவரன் துளசி கே சங்கரன் து. கோவர்த்தனன் ஏ கதிரவன் சையத் அப்சல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இறுதியாக மாவட்ட வர்த்தகரணி துணை அமைப்பாளர் மஞ்சம்பாக்கம் ஆர் பாபு மற்றும் மாவட்ட பிரதிநிதி பி நிர்மல் குமார் ஆகியோர் நன்றி கூறினார்கள்.


நாள் : 30.10.2023
திங்கட்கிழமை
மாலை 4.00
மணியளவில்
இடம் :
தண்டையார்பேட்டை
மார்க்கெட்
(எல்லைமுத்தம்மன்
கோயில் அருகில்)



ஆர்.கே.நகர் முன்னாள் பகுதி செயலாளர்
வெ.சுந்தரராஜன்
அவர்களின்
இரண்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு
நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி
நலத்திட்ட உதவி வழங்குபவர்கள்
மாண்புமிகு. பி.கே.சேகர்பாபு
சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
அமைச்சர் – இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்
சி.வி.எம்.பி.எழிலரசன் MLA
கழக மாணவர் அணி செயலாளர்
தா.இளைய அருணா B.E.,MC
செயலாளர் – சென்னை வடக்கு மாவட்டம்
தலைவர் – பெருநகர சென்னை மாநகராட்சி நகரமைப்பு
டாக்டர் கலாநிதி வீராசாமி MP
கழக அயலக அணி தலைவர்
இரா.கிரிராஜன் MP
கழக சட்ட திட்ட திருத்தக் குழு செயலாளர்
ஜே.ஜே.எபினேசர் MLA
சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்
ஆர்.டி.சேகர் MLA
தலைமை செயற்குழு உறுப்பினர்
ஐட்ரீம் ஆர்.மூர்த்தி MLA
தலைமை செயற்குழு உறுப்பினர்
S.மோகன்
மாநில மாணவர் அணி இணைச்செயலாளர்
மன்னை த.சோழராஜன்
மாநில மாணவர் அணி துணைச்செயலாளர்
இரா.லட்சுமணன்
ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர்
எஸ்.ஜெபதாஸ்பாண்டியன்
ஆர்.கே.நகர் மேற்கு பகுதி செயலாளர்
ஆர்.வெற்றிவீரன்
மாவட்ட அவைத்தலைவர்
நேதாஜி யு.கணேசன்
4 வது மண்டல குழு தலைவர்
மற்றும் மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்துக்கொள்கின்றனர்.
நிகழ்ச்சி ஏற்பாடு :
வெ.சு.பிரபாகரன் B.Sc.,B.L.,
முன்னாள் துணை அமைப்பாளர்
சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி
வெ.சு.சத்தியநாராயணன் B.A.,
அமைப்பாளர்
சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சென்னை தீனன்
### அக்டோபர் 30 (1977)



சென்னை, சைதாப்பேட்டை, முனியப்பிள்ளை சத்திரத்தைச் சேர்ந்த இவர், இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு தீவிரமாகப் பணியாற்றியவர்.

1977ஆம் ஆண்டு அக்டோபர் 30ஆம் நாள் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தலைமைக் கழகம் அறிவித்ததற்கிணங்க, சென்னையில் நடைபெற்ற பேராட்டத்தில் கறுப்புக் கொடி ஏந்தி களம் கண்டபோது, அன்றைய ஆட்சியாளரின் காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலியானார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தமிழ்நாடு மருத்துவத் துறை வரலாற்றில்

# 10 ஆயிரம் மழைக்கால மருத்துவ முகாம்கள்!

## கோடம்பாக்கம் மண்டலத்தில் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, அக்.30-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (29.10.2023) தமிழ்நாடு முழுவதும் 10 வாரங்கள் நடைபெற உள்ள 10,000 மழைக்கால சிறப்பு முகாம்களைத் தொடங்கி வைக்கும் விதமாக, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு138க்குட்பட்ட எம்.ஜி.ஆர். நகர் மார்க்கெட் பகுதியில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்து, பொதுமக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முழுவதிலும் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது. கடந்த மாதம் டெங்கு பாதிப்புகள் செய்திகள் அதிகரிக்கத் தொடங்கியவுடனேயே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப, உயரலுவலர்களுடான கூட்டம் இரண்டு முறை நடத்தப்பட்டது. தலைமைச் செயலாளர் தலைமையில் இரண்டு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. அதோடுமட்டுமல்லாது, பல்வேறு சேவைத்துறைகள் ஒருங்கிணைந்த கூட்டமும் நடத்தப்பட்டிருக்கிறது. தொடர்ச்சியாக இந்த துறையின் செயலாளர் அவர்கள் பல கூட்டங்களை மாவட்ட அளவில் மருத்துவத்துறை அலுவலர்களுடன் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து இரண்டு, மூன்று மாதங்களாகவே டெங்கு பாதிப்புகள் கட்டுப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்கு பருவ மழையின்போதும், தென்மேற்கு பருவமழையின்போதும் மழைக்கால நோய்களான டெங்கு, மலேரியா, சிக்கன்குனியா, டையரியா போன்ற நோய்கள் பரவல் என்பது கூடுதலாகி வரும். எனவே இந்த ஆண்டை பொறுத்தவரை வடகிழக்கு பருவமழை மட்டுமல்லாமல் கோடைக்கால மழை, வெப்பச்சலன மழை என்று தொடர்ச்சியாக மழை பெய்துக் கொண்டும் இருக்கிறது.

எனவே தமிழ்நாடு முழுவதிலும் மக்கள் நல்வாழ்வுத்துறையும், உள்ளாட்சித்துறை அமைப்புகளும் ஒருங்கிணைந்து தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதிலும், டெங்கு பாதிப்புகள் ஏற்படுவது தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டு வருகிறது. மருத்துவத்துறையைப் பொறுத்தவரை அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும், மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும், வட்டார அரசு மருத்துவமனைகளிலும் டெங்குவிற்கு என்று தனி வார்டு உருவாக்கப்பட்டு அந்தந்த மருத்துவமனைகளின் இடவசத்திற்கு ஏற்ப படுக்கைகள் அமைத்து தனி சிகிச்சையும் அளிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் ஒவ்வொரு ஆண்டும் இந்த பாதிப்புகள் என்பது ஒரு 10,000 த்திற்கும் கீழே என்று தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கிறது. அந்தவகையில் தமிழ்நாட்டில் ஜனவரி முதல் தற்போது வரை ஏற்பட்டிருக்கும் டெங்கு பாதிப்புகளின் எண்ணிக்கை 5,896. இதில் இன்று வரை மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்கள் 607, கடந்த பத்து மாதங்களில் ஏற்பட்டுள்ள இறப்புகளின் எண்ணிக்கை, நேற்று தஞ்சையில் ஏற்பட்டுள்ள இறப்புகளையும் சேர்த்து 7 என்கின்ற எண்ணிக்கையில் இருக்கின்றன. எனவே தொடர்ச்சியாக டெங்கு பாதிப்புகள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் டெங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் எண்ணிக்கை 3,00,093 பேருக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது கடந்த ஆண்டு 2,65,834 பேருக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. அதற்கு முந்தைய ஆண்டு 1,73,099 பேருக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இந்த பத்து மாதங்களில் டெங்கு கண்டறியப்பட்ட நாள் முதல் இதுவரை அதிகபட்ச பரிசோதனைகளான மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப, மழைக்கால நோய்கள் டெங்கு, மலேரியா, சிக்கன்குனியா, சேற்றுப்புண், இருமல், வறண்ட இருமல் போன்ற பல்வேறு நோய் பாதிப்புகளிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கு மருத்துவ முகாம்கள் தொடர்ச்சியாக நடத்திட வேண்டும் என்று சொன்னார்கள். அந்தவகையில் வாரம் தோறும் 1000 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட வேண்டும் என்று அறிவித்திருந்தோம். மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் வடகிழக்கு பருவமழை முடியும்வரை தொடர் மருத்துவ முகாம்கள் நடத்திட வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். எனவே இன்று தொடங்கி டிசம்பர் மாதம் 31ஆம் தேதி வரை உள்ள ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் அதாவது 10 ஞாயிற்றுகிழமைகளிலும் மொத்தம் 10,000 தொடர் மருத்துவ முகாம்கள் நடத்தப்படும். மருத்துவத்துறை வரலாற்றிலேயே 10,000 மருத்துவ முகாம்கள் நடத்தப்படுவது இதுவே முதல் முறை, இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும். எனவே சம்பந்தப்பட்ட பகுதிகளைச் சார்ந்த மக்கள் பயன்பெற வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

## சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள்,வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச்செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு



சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ,பகுதிக் கழகச் செயலாளர்கள்,வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (30-10-2023 திங்கட்கிழமை) மாலை 5.30 மணியளவில் சென்னை, ஓட்டேரி,ஸ்டாரன்ஸ். சாலை,எம்.கே.டி.மகாலில் அவைத்தலைவர் கோ. ஏகப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், முன்னாள்,இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள்.. பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்,வட்டக் கழகச் செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப்பணிகள்

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர்- சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க

## 1943 மழைக்கால மருத்துவ முகாம்களில் 1,04,876 பேர் பங்கேற்று பயன்!

### மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, அக்.30

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நேற்று (29.10.23) 1943 மழைக்கால மருத்துவ முகாம்கள் நடைபெற்று, 1,04,876 பேர் பங்கேற்று பயன் பெற்றனர் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.



அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாடு அரசு பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை {ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தோறும் ஆயிரம் சிறப்பு காய்ச்சல் தடுப்பு முகாம்கள்} நேற்று 29.10.2023 (ஞாயிற்றுக்கிழமை ) முதல் சிறப்பு மருத்துவ முகாம் தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் பருவகால நோய்கள் ஏற்படா வண்ணம், குறிப்பாக டெங்கு மற்றும் இன்புளூயன்சா காய்ச்சல் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்பதால் இவற்றை கட்டுப்படுத்தும் பொருட்டு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறையின் மூலம் தடுப்பு நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தோறும் ஆயிரம் சிறப்புக் காய்ச்சல் தடுப்பு மருத்துவ முகாம்கள் காய்ச்சல் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் அந்தந்த பகுதிகளிலேயே பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டு தமிழகம் முழுவதும் அனைத்து இடங்களிலும் காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட உள்ளன. இந்த முகாம்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தோறும் வரும் டிசம்பர்-2023 வரை நடைபெறும். அதன் விபரம் பின் வருமாறு:-

ஞாயிற்றுக்கிழமைகளில் முகாம் நடைபெறும் நாள், நடத்தப்படும் முகாம்களின் எண்ணிக்கை வருமாறு:-

29.10.2023 - 1,000, 05.11.2023 - 1,000, 12.11.2023 - 1,000, 19.11.2023 - 1,000, 26.11.2023 - 1,000, 03.12.2023 - 1,000, 10.12.2023 - 1,000, 17.12.2023 - 1,000, 24.12.2023 - 1,000, 31.12.2023 - 1,000.

31.12.2023 வரை நடத்தப்படும் முகாம்களின் எண்ணிக்கை 10,000 ஆகும்.

மருத்துவ குழுவினர் தினந்தோறும் காய்ச்சல் பாதித்த இடங்களுக்குச் சென்று ஆங்காங்கே மருத்துவ சிகிச்சை முகாம்கள் நடத்த உள்ளனர். இந்த முகாம்களில் காய்ச்சல் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான சிகிச்சைகள் வழங்கப்படும்.

மேலும் இந்த முகாம்களில் பொதுமக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் பொருட்டு நிலவேம்பு குடிநீர் கஷாயம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் பொதுமக்களுக்கு காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இந்த காய்ச்சல் முகாம்களுக்காக தமிழகத்தில் 476 நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஈடுபடுத்தப்படும்

மேலும் 805 பள்ளி சிறார்களுக்கான மருத்துவ குழுக்கள் (RBSK) மூலம் பள்ளிகளில் காய்ச்சல் கண்டறியும் முகாம் ஏற்படுத்தப்பட்டு அனைத்து பள்ளி மாணவ மாணவியர்களுக்கும் பரிசோதிக்கப்பட்டு காய்ச்சல் கண்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது

இதன் தொடர்ச்சியாக நேற்று (29.10.2023, ஞாயிற்றுக்கிழமை) முதல் சிறப்பு மருத்துவ முகாம் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றது. இதில் 1943 முகாம்கள் நடைபெற்று 1,04,876 பயனாணிகள் பங்கேற்றனர். இவர்களில். 589 நபர்களுக்கு காய்ச்சல் மற்றும் சளி, இருமல் கண்டறிந்து அவர்கள் குணப்படுத்தப்பட்டனர்.

முன்னதாக இந்த சிறப்பு மருத்துவ முகாமை மருத்துவம் மற்றும் மக்கள் Documentation அமைச்சர் மா.சுப்பிரமணியன் தமிழ்நாடு முழுவதும் 10 வாரங்கள் நடைபெற உள்ள 10,000 மழைக்கால சிறப்பு முகாம்களை தொடங்கி வைக்கும் விதமாக, சென்னை கோடம்பாக்கம் மண்டலத்துக்கு உட்பட்ட வார்டு 138, எம். ஜி. ஆர்.நகர் மார்க்கெட் பகுதியில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினை நேற்று (29.10.2023) தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பாக சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலாப்பூர் தொகுதிக்குட்பட்ட சாந்தோம் தேவாலயத்தில் நீட் விலக்கு கையெழுத்து இயக்கம் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் தலைமையில், சென்னை தென்மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில துணைச் செயலாளர் அடையாறு ஷபீல், மாவட்ட அமைப்பாளர் ஜெ.எஸ்.ஆர். ஜெகன்ராஜ், மாவட்ட தலைவர் சேக் முகமது, துணைத் தலைவர் மு. பாஷா, மாவட்ட துணை அமைப்பாளர்கள் தளஸ். கே.நசீர் அ. உத்திரியம், பி. அலெக்ஸ், அலி உசேன், பகுதி அமைப்பாளர் தளம். முகமது சுலைமான் முஜீப் ரஹ்மான், பி. இருதயராஜ், அ. சிமியோன் ராஜா, பி.ஜி. நந்தகுமார், எஸ்.ஆர்.விவேகானந்தன், ஏ. அர்ஜுனன் மற்றும் தோழர் மார்கெட் புலி ஆகியோர் பங்கேற்றனர்.

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, தலைமை ! கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு

## சென்னை வடகிழக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பாக மாபெரும் ஒப்பித்தல் போட்டி !

சென்னை, அக். 30 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாணவ -மாணவிகளுக்கான மாவட்டம் தழுவிய மாபெரும் ஒப்பித்தல் போட்டி நாளை (31.10.2023 செவ்வாய்க்கிழமை) காலை 9.00 மணியளவில் மாதவரம் மூலக்கடை மேம்பாலம் அருகில் செயின்ட் ஹனிஸ் ஆர்ட்ஸ் அண்ட் சயின்ஸ் காலேஜில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது.

மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் ஜி.துக்காராம், 3வது மண்டலக் குழுத் தலைவர் 25(அ)வட்டச் செயலாளர் எஸ்.நந்தகோபால், சென்னை வடகிழக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப்பேரவை மாவட்ட தலைவர் முல்லை பா.ஆறுமுகம், மாவட்ட அமைப்பாளர் கு.தமிழ்மணி, ஆகியோர் வரவேற்புரையாற்றுகிறார்கள்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆர்.கிரிராஜன் எம்.பி, திருவொற்றியூர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, ஆகியோர் சிறப்பிக்கிறார்கள்.


கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில செயலாளர் கலைமாமணி இறையன்பு குத்தூஸ், மாநில துணை செயலாளர் கவிஞர் நன்மாறன், ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள். குறிஞ்சி எஸ்.கணேசன், டி.ராமகிருஷ்ணன், மு.ராஜேந்திரன், பி.அறிவழகி, எம்.ஆனந்தன், மிசா பா.மதிவாணன், வி.இராமநாதன், என்.பரந்தாமன், ஜெ.ஜெய்மதன், டி.ஏ.ராஜி, இரா.முருகேசன், பி.சாந்தி, மண்டல குழு தலைவர்கள் திமு.தனியரசு, ஏ.வி.ஆறுமுகம், ஒன்றிய பகுதி கழக செயலாளர்கள் மீ.வே. கருணாகரன், புழல் என்.நாராயணன், பே.சரவணன், ஜி. தயாளன், வை.ம.அருள்தாசன்,

செங்குன்றம் பேரூர் கழக செயலாளர் ஜி. இராஜேந்திரன், டி. கார்த்திகேயன் எம்.சி, 29வது வட்ட செயலாளர் நா.பெருமாள், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை சென்னை வடகிழக்கு மாவட்ட நிர்வாகிகள் ஏ.திராவிடமணி, கே.முருகேசன், ஜி.காமராஜ், நா.பரசுராமன், கே.தங்கராஜ், பா. திருநாவுக்கரசு, ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இந்நிகழ்வில் சென்னை வடகிழக்கு மாவட்ட மாதவரம் திருவொற்றியூர் பகுதி வட்ட கழக நிர்வாகிகள், கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொள்கிறார்கள்.




உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி உத்திரமேரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட 42 இருளர் இன மக்களுக்கு இலவச வீடு கட்ட ஆணையை மாவட்ட கழக செயலாளர்.க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் கெ. ஞானசேகரன், டி.குமார், இரா. நாகன், பேரூராட்சி மன்ற தலைவர் பொன் சசிகுமார், பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல் உள்ளிட்ட ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



## 169 அ வட்டப் பொருளாளர் டி.கண்ணன் தலைமையில் தீரன் தீனன் 46-வது நினைவு நாள்!



சென்னை, அக். 30.

சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்குப் பகுதி 169 அ வட்டக் கழகப் பொருளாளர் டி.கண்ணனின் மூத்த சகோதரரும் மொழிப்போர் தியாகியுமான தீனன் அவர்களின் நினைவு நாள் நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆணையை ஏற்று, 1977 ஆம் ஆண்டு சைதை சின்னமலை ஹால்டா அருகில் நடைபெற்ற கறுப்புக் கொடி அறப்போராட்டத்தில் பங்கேற்று , அன்றைய அரசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் வீர மரணம் அடைந்த தியாக மறவர் பேன்பேட்டை தீரன் தினனுக்கு இன்று (30.10.2023 - திங்கள்கிழமை) 46-வது ஆண்டு நினைவு நாளாகும்.

கழக மாவீரன் தீனனின் நனைவு நாளில் அன்னாருக்கு எங்களது அஞ்சலியை காணிக்கையாக்கிறோம்.

சைதை கிழக்குப் பகுதி 169 அ வட்டப் பொருளாளர், டி.தீனனின் இளவல் பேன்பேட்டை டி.கண்ணன் ஏற்பாட்டில் இன்று அன்னாரது படம் அலங்கரித்து வைக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்படுகிறது. இதில் கழகத்தினர் பங்கேற்று அஞ்சலி செலுத்துகின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வெ. சுந்தரராஜன்

**அக்டோபர் 30 (2021)**



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு சென்னை இராதாகிருஷ்ணன் நகர் பகுதியில் பிரதிநிதி, பொருளாளர், அவைத்தலைவர் எனவும், தொடர்ந்து பகுதிச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**வடசென்னை கூட்டுறவு சங்கத் துணைத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.**

**இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப்போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**கழகத் தலைவர் அவர்கள், “களத்தில் பம்பரமாய்ச் சுழன்று பணியாற்றும் நல்லதொரு தளகர்த்தரை கழகம் இழந்திருக்கிறது” என தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சேமிக்கும் நற்பழக்கத்தை ஊக்குவிப்பீர்!

# எதிர்கால வாழ்க்கையை நம்பிக்கைக்குரியதாக மாற்றுவது சேமிப்பே!

## உலக சிக்கன நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, அக். 30-**

**"பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சிறு வயது முதலே சேமிக்கும் நற்பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். எதிர்கால வாழ்க்கையை நம்பிக்கைக்குரியதாக மாற்றுவது சேமிப்பே" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உலக சிக்கன நாளையொட்டி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உலக சிக்கன நாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

சிக்கனத்தின் இன்றியமையாமையை அனைவருக்கும் உணர்த்திடும் நாளாக அக்டோபர் திங்கள் 30 ஆம் நாள், ஆண்டுதோறும் "உலக சிக்கன நாள்" எனக் கொண்டாடப்படுவதைக் குறித்து பெருமகிழ்ச்சி அடைவதுடன் என் மனமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு குடும்பமும் சிக்கனத்தைக் கடைப்பிடித்து சேமித்தால், அதன்வாயிலாகக் குடும்பத்தின் தேவைகளை நிறைவு செய்து கொள்வதுடன், அவ்வப்போது ஏற்படும் எதிர்பாரச் செலவினங்களையும் சமாளித்திட இயலும்.

"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை

போகாறு அகலாக் கடை"

என்ற குறளில் வள்ளுவர் பெருந்தகை, பொருள் வரும் வழி சிறிதாக இருந்தாலும், பொருள் செலவாகும் வழி பெரிதாக இல்லையெனில், அதனால் தீங்கு இல்லை என்று சிக்கனமாக வாழ்தலின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறார். சேமிப்பின் அவசியத்தை பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சிறு வயது முதலே எடுத்துரைத்து, சேமிக்கும் நற்பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். "இன்றைய சேமிப்பு, நாளைய வாழ்வின் பாதுகாப்பு" என்பதனைக் கருத்தில் கொண்டு, மக்கள் தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை எதிர்காலத் தேவைக்காக சேமிக்க வேண்டும்.

சேமிப்பே ஒருவரின் எதிர்கால வாழ்க்கையை நம்பிக்கைக்குரியதாக மாற்றுகிறது. சேமிப்பது மட்டுமல்ல, அதைச் சரியான வீதத்தில் முதலீடு செய்வதும் முக்கியம். எனவே, உலக சிக்கன நாள் கொண்டாடப்படும் இவ்வேளையில், மக்கள் தங்கள் சேமிப்புகளை அஞ்சலக சேமிப்புத் திட்டங்களில் முதலீடுசெய்து அதன்மூலம் தங்கள் வாழ்வில் வளம் சேர்ப்பதுடன், நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் துணை புரிந்திட வேண்டுகிறேன்.

சேமிப்போம்! சிறப்பாக வாழ்வோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

நே.சிற்றரசு தலைமை !வினோத் வேலாயுதம் முன்னிலையில்

# ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி இளைஞரணி வ.வேல் குமார் திருமண வரவேற்பு விழா!

## அமைச்சர்கள் - தயாநிதி மாறன் எம்.பி -அன்பகம் கலை -நா.எழிலன் பங்கேற்பு!

சென்னை அக்:30

சென்னை மேற்கு மாவட்டம்,ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் வ.வேல் குமார் செ.மோனிஷா ஆகியோரின் திருமண வரவேற்பு விழா இன்று (30.10.2023 திங்கட்கிழமை) 6 மணிக்கு மேல் அன்னை அஞ்சுகம் சமூக நலக்கூடம், கோடம்பாக்கத்தில் நடைபெறுகிறது.

மணவிழா வரவேற்பிற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி தலைமை ஏற்கிறார். ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம் முன்னிலை வகிக்கிறார்.



நிகழ்ச்சியில் கழக இளைஞரணி செயலாளர்,இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்,அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மேலும் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு,கழக அமைப்பு இணைச் செயலாளர் அன்பகம் கலை,தயாநிதி மாறன் எம்.பி,மருத்துவர் நா. எழிலன் எம்.எல்.ஏ,எம். கே.மோகன் எம்.எல்.ஏ,மேயர் பிரியா ராஜன்,துணை மேயர் மகேஷ்குமார்,மயிலை த.வேலு எம்.எல்.ஏ,தூத்துக்குடி எஸ். ஜோயல்,ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ,ஏ.எம்.வி. பிரபாகராஜா எம்.எல்.ஏ,ஜெ.எஸ். அகஸ்டின் பாபு,இளையராஜா வழக்கறிஞர் ப.பிரகாஷ்,ராஜா அன்பழகன் எம்.சி,எஸ் அருண்குமார், நுங்கை வி.எஸ். ராஜ்,எம்.டி.ஆர்.நாதன்,டி.ஜோஸ்டேனியல்,து.விக்டர்,வி.எஸ்.கலை,ஆர்.என்.துரை,ஏ.சங்கீதா

பகுதி செயலாளர்கள் மா.பா.அன்புதுரை,நா. ராமலிங்கம்,எஸ். மதன்மோகன்,ஏ.ஆர்.பி. எம்.காமராஜ்,ச. பரமசிவம் உள்ளிட்ட மாநில மாவட்ட பகுதி கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

109அ வட்ட துணைச் செயலாளர் ஆ. விஜயகுமார் நன்றி கூறுகிறார்.

கே.கு. செந்தமிழ் அரசு தலைமை! ஆர்.டி.சேகர் - அ.முருகன் - க.ஜெயராமன் முன்னிலை!

# பெரம்பூர் வடக்குப் பகுதி 37-வது வட்டத்தில் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

## டி.கே.எஸ். இளங்கோவன் - தா.இளைய அருணா - கலாநிதி வீராசாமி வழங்குகின்றனர்!

சென்னை, அக்.30-

பெரம்பூர் வடக்குப் பகுதி, 37-வது வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மகாகவி பாரதி நகர் 13-வது மத்திய குறுக்குச்சாலை சந்திப்பில் இன்று 30.10.2023 திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு நடைபெறுகிறது.

வட்டச் செயலாளர் கே.இ.செந்தமிழ் அரசு தலைமை தாங்குகிறார். ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., பெரம்பூர் வடக்கு பகுதிச் செயலாளர் அ.முருகன், பெரம்பூர் தெற்கு பகுதிச் செயலாளர் க.ஜெயராமன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்டப் பிரதிநிதி எம்.அருண் சக்கரவர்த்தி, ஏ.தேவன்பு, ஆர்.மோகன், ஏ.ஜெயக்குமார், ஏ.விஜயகுமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், டி.கே.எஸ். இளங்கோவன் எம்.பி., தா. இளைய அருணா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் இரா.கருணாநிதி, இரா. நரேந்திரன், எஸ்.ஆர். கமலக்கண்ணன், வி.தயாளன் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ. தமிழ்செல்வன், ப.மதிவாணன், டி.கமலக்கண்ணன், க.அமுல், வட்டச் செயலாளர்கள் ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி எம்.சி., கே.வி.ராஜன், எம்.உமாபதி, ஆர்.அரிதாஸ், சி.எஸ்.இரவி, த.ஆறுமுகம், ஆர்.எஸ். மனோகரன், கி.தினகரன், வி.முருகன், க.பாபு, ஜி.மாரிமுத்து மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், பகுதிக்கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கிறார்கள்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்குகிறார்!

# சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் டி.லோகேஷ் அறிவிப்பு!

சென்னை, அக். 30 -

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் இன்று மாலை நடைபெறுகிறது என மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி.லோகேஷ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணியின் ஆலோசனைக் கூட்டம் (30.10.2023 திங்கட்கிழமை) மாலை 6 மணியளவில் சென்னை ஓட்டேரி ஸ்டா ரன்ஸ் ரோடு ஜி.பி.மினி ஹாலில் நடைபெறுகிறது. மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

இக்கூட்டத்தில் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள், வட்ட துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: இளைஞர் அணியின் ஆக்கப் பணிகள்

இவ்வாறு மாவட்ட அமைப்பாளர் டி.லோகேஷ் கூறியுள்ளார்.



சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் கிழக்குப் பகுதிக் கழகம் சார்பில் கலைஞர் 100–ன் 50–வது நிகழ்ச்சி மாற்றத்தின் நாயகன் – வரலாற்றுச் சூரியன் என்ற தலைப்பில் பகுதிச் செயலாளர் வே.வாசு தலைமையில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் சிறப்புரையாற்றினார். இதில் மார்க்சிஸ்ட் சி.மகேந்திரன், தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் தி.வேல்முருகன் எம்.எல்.ஏ. தயாநிதி மாறன் எம்.பி., அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., கூ.பி.ஜெயின், ப.ரங்கநாதன் சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். வட்டச் செயலாளர் எ.வேதா, காஞ்சி செ.துரை ஆகியோர் நன்றி கூறினர்.

முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை! திருவள்ளூரில் நவம்பர் 5 அன்று

# சென்னை மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA-2) பயிற்சி பாசறைக் கூட்டம்!

## கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் கடந்த 22.03.2023 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு கழகத்தில் ஒரு கோடி புதிய உறுப்பினர்களை சேர்த்தல், முழுமையாக பூத் கமிட்டி அமைத்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேற்கண்ட தீர்மானங்களின்படி, கழகத்தில் மொத்தம் இரண்டு கோடி உறுப்பினர்களை வெற்றிகரமாகச் சேர்த்து, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA -2) நியமிக்கப்பட்டு தலைமைக் கழகத்தால் முழுமையாக சரிபார்க்கப்பட்டுள்ளது.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி சரிபார்க்கப்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கென "வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA-2) ஒரு நாள் பயிற்சி பாசறைக் கூட்டம்" நடத்திட முடிவெடுக்கப்பட்டு, டெல்டா மண்டல கூட்டம் ஜுலை 26 அன்று திருச்சியிலும் - தென்மண்டலக் கூட்டம் ஆகஸ்ட் 17 அன்று இராமநாதபுரத்திலும் - மேற்கு மண்டலக் கூட்டம் செப்டம்பர் 24 அன்று காங்கேயத்திலும் - வடக்கு மண்டலக் கூட்டம் அக்டோபர் 22 அன்று திருவண்ணாமலையிலும் என இதுவரை 56 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கு 20-க்கும் மேற்பட்ட கழகத்தின் சிறந்த சொற்பொழிவாளர்களைக் கொண்டு கொள்கை வழிகாட்டுதலும் தேர்தல் பயிற்சியும் வழங்கப்பட்டு, 4 மண்டலங்களிலும் பயிற்சிப் பாசறைக் கூட்டம் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து.

நிறைவாக, **சென்னை மண்டலத்திற்குட்பட்ட** மாவட்டங்களின் 12 ஆயிரம் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பங்கேற்கும் "**வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA-2) பயிற்சி பாசறைக் கூட்டம்**" வருகிற **நவம்பர் 5 அன்று திருவள்ளூரில் உள்ள கலைஞர் திடலில்** தமிழ்நாடு முதலமைச்சர் **கழகத் தலைவர்** அவர்கள் சிறப்புரையாற்றிட நடைபெற உள்ளது.

சென்னை மண்டலத்துக்கு உட்பட்ட பின்வரும் 11 கழக மாவட்டங்களின், மாவட்டச் செயலாளர்கள், தமது மாவட்டங்களுக்குட்பட்ட 'வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA-2) கூட்டத்தை' கூட்டி, இப்பயிற்சி பாசறைக் கூட்டத்தின் அவசியத்தை எடுத்துரைத்து, தங்களது மாவட்டத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA-2) அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**1.திருவள்ளூர் கிழக்கு**
**2.திருவள்ளூர் மத்திய**
**3. திருவள்ளூர் மேற்கு**
**4.சென்னை கிழக்கு**
**5.சென்னை வடகிழக்கு**
**6.சென்னை வடக்கு**
**7.சென்னை மேற்கு**
**8.சென்னை தெற்கு**
**9.சென்னை தென்மேற்கு**
**10.காஞ்சிபுரம் வடக்கு**
**11.காஞ்சிபுரம் தெற்கு**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.10.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

கலைஞர் 100 1924 - 2023



பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
அவர்களின்
116ஆவது பிறந்த நாள்
மற்றும்
குரு பூஜை

நாள் : 30.10.2023, திங்கட்கிழமை, நேரம் : காலை 10.30 மணி,
இடம் : பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டம்

தமிழ்நாடு அரசின் சார்பில்
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
அவர்களின் நினைவிடத்தில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மற்றும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள்
மாலை அணிவித்து மரியாதை செலுத்துவார்கள்

நாள் : 30.10.2023, திங்கட்கிழமை, நேரம் : காலை 9.30 மணி, இடம் : நந்தனம் சந்திப்பு, அண்ணா சாலை, சென்னை

தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்

செ.ம.தொ.இ./1239/வரைகலை/2023

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-600 009

# திராவிட மாடல் அரசு 41

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**



## முறைசெய்து காப்பாற்றும் சமாதானம்!

மக்களாட்சிக் கட்டமைப்பில், ஒரு மாநிலத்துக்குத் தேவைப்படுகின்ற நிதி ஆதாரங்களில் ஒன்று, வரி. சமுதாயத்திலிருந்து அரசுக்குக் கிடைக்கும் வருமானத்தில் வணிக வரி, விற்பனை வரி உள்ளிட்ட வரிகள் மூலம் கிடைக்கும் வருவாய் மிக முக்கியமான பங்களிப்பைச் செய்கின்றன.

தொழில் மற்றும் வர்த்தகத்தில் ஈடுபடும் வணிகர்கள், அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளை முறையாக செலுத்தினால்தான் அரசு இயந்திரம் தொய்வின்றிச் சுழலும். வரி வருவாய் சீராக இருந்தால்தான் மக்கள் நலத் திட்டங்கள் உட்பட, பல வளர்ச்சிப் பணிகளை, அரசால் எந்தவிதச் சிரமும் இல்லாமல் மேற்கொள்ள முடியும்.

ஆனால், பல்வேறு காரணங்களால் தமிழ்நாடு அரசுக்கு வணிகர்கள் செலுத்த வேண்டிய வரி நிலுவைத் தொகை தொடர்பாக, 2 இலட்சத்து 11 ஆயிரத்து 607 கேட்பு வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவற்றில் தொடர்புடைய வணிகர்கள் மற்றும் வணிக நிறுவனங்களின் எண்ணிக்கை 1 இலட்சத்து 42 ஆயிரத்து 569. இவற்றில் நிலுவையாக உள்ள தொகை 25 ஆயிரம் கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு மிக அதிக எண்ணிக்கையில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், வணிக வரித் துறையின் பணிச்சுமை அதிகரிப்பதோடு, நமது வணிகர்களும் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’ கொண்டுவந்துள்ளதுதான், **‘புதிய வரி நிலுவைத் தொகை சமாதானத் திட்டம்’.**

### புதிய அணுகுமுறை... கூடுதல் சலுகை...

தமிழ்நாட்டில் மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், விற்பனை வரிச் (மேல் வரி) சட்டம் உள்ளிட்ட மேலும் பத்து சட்டங்கள் நடைமுறையில் இருந்து வந்தன. இந்தச் சட்டங்களை எல்லாம் உள்ளடக்கி, 2017-ஆம் ஆண்டுஜூலை 1 அன்று நாடு முழுவதும் ஜி.எஸ்.டி. சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது.

இந்நிலையில், ஏற்கெனவே வழக்கத்திலிருந்த மேற்கூறிய வரிச் சட்டங்களின் கீழ், மாநில அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய வரி, அதன் மீதான வட்டி மற்றும் அபராதம் ஆகியன இன்னமும் பல வணிகர்களின் பெயரில் நிலுவையில் இருந்து வருகின்றன. இந்த நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்துவதில் சலுகைகள் வழங்கப்பட்டு, இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு காணப்பட வேண்டும் என்பது வணிகர்களின் நீண்ட கால கோரிக்கையாகும். அதைப் பரிசீலித்த நமது முதலமைச்சர், பழைய நிலுவைத் தொகைகளை வசூலிப்பதில், வணிகர்களுக்கும் வணிக வரித் துறைக்கும் இடையில் ஒரு சமாதானத்தைக் கொண்டு வர அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது தான் **‘புதிய வரி நிலுவைத் தொகை சமாதானத் திட்டம்’.**

கடந்த ஆண்டுகளில் இந்த நிலுவைத் தொகை வசூலிப்பு தொடர்பாகப் பல சமாதான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருந்தாலும், **‘திராவிட மாடல் அரசு’** ஆட்சியில், புதிய அணுகுமுறையில், கூடுதல் சலுகைகளுடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### தமிழ்நாடு வரலாற்றில் முதல்முறை…

இந்தத் திட்டத்தின் கீழ் வரி நிலுவை வைத்திருக்கும் வணிகர்கள் ஐந்து பிரிவினராகப் பிரிக்கப்படுகிறார்கள். முதலாவதாக, ஒரு வரிவிதிப்பு ஆண்டில் ரூபாய் 50 ஆயிரத்துக்குக் குறைவான வரி, வட்டி, அபராத தொகை செலுத்த வேண்டியவர்கள். இவர்கள் பெரும்பாலும் சிறு வணிகம் செய்யும் எளிய வணிகர்களாகவே இருப்பார்கள். இவர்களின் நிலுவைத் தொகை முற்றிலுமாகத் தள்ளுபடி செய்யப்படும்.

இதில் உள்ள சிறப்பம்சம், ரூபாய் 50 ஆயிரம் என்ற உச்சவரம்பானது, ஒவ்வொரு வரிவிதிப்பு ஆண்டுக்கும் பொருந்தும். அதாவது ஒரு எளிய வணிகருக்கு அவர் செலுத்த வேண்டிய நிலுவை ஒவ்வொரு வரிவிதிப்பு ஆண்டுக்கும் தனித்தனியாக ரூபாய் 50 ஆயிரத்துக்கு உட்பட்டிருந்தால், அது முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்படும். இது போன்றதொரு சலுகை வழங்குவது தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இதுதான் முதல் முறையாகும்.

இதன் கீழ் சுமார் 1 இலட்சத்து 40 ஆயிரத்து 400 இனங்கள் தொடர்புடைய ஏறக்குறைய ஒரு இலட்சம் எளிய வணிகர்கள் பயன்பெறுவார்கள். மொத்தம் ரூபாய் 147 கோடி நிலுவை முற்றிலுமாக இந்த வணிகர்களின் பொருட்டு தள்ளுபடி செய்யப்படுகிறது.

### பயனடையும் பெருவணிகர்கள்

வரி நிலுவை செலுத்த வேண்டிய எஞ்சிய வணிகர்கள், ரூபாய் 50 ஆயிரம் முதல் 10 இலட்சம் வரை நிலுவையில் உள்ளவர்கள், ரூபாய் 10 இலட்சம் முதல் 1 கோடி வரை வரி நிலுவையில் உள்ளவர்கள், ரூபாய் 1 கோடி முதல் 10 கோடி வரை நிலுவையில் உள்ளவர்கள் மற்றும் ரூபாய் 10 கோடிக்கு மேலாக நிலுவையில் உள்ளவர்கள் என நான்கு வரம்புகளின் கீழ் கொண்டு வரப்படுவர். (அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளைப் பார்க்க பெட்டிச் செய்தி)

இந்தத் திட்டத்தின் கீழ் நிலுவைத் தொகையினை வணிகர்கள் கட்ட முன்வரும் நாள் வரை அவர்களது கணக்கில் வைக்கப்பட வேண்டிய திரண்ட வட்டித் தொகையும் (ACCRUED INTEREST) முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும். மேலும், ஏறக்குறைய ஒரு இலட்சம் எளிய வணிகர்களுக்கு நிலுவைத் தொகை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படுவதுடன், வரி நிலுவைக்காகப் பிணைக்கப்பட்டுள்ள 1,002 சொத்துக்கள் வணிகர்களுக்கு உடனடியாகத் திரும்ப ஒப்படைக்கப்படும். இதன் மூலம் 47 ஆயிரம் வணிகர்கள் சிறப்புச் சலுகைகள் பெற்று வரி நிலுவைச் சுமையில் இருந்து வெளிவர இருக்கிறார்கள். இந்தத் திட்டம் 2023-ஆம் ஆண்டு அக்டோபர் 16 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. நான்கு மாத காலம் அதாவது 2024-ஆம் ஆண்டு பிப்ரவரி 15-ஆம் தேதி வரை நடைமுறையில் இருக்கும்.

யாருக்கும் தோல்வி இல்லாத வெற்றியின் இன்னொரு பெயர்தான் சமாதானம். இந்தத் திட்டம் மூலம் வணிகர்கள் வளம் பெறட்டும். வணிகம் வளரட்டும்!

**...சாதனை தொடரும்**

#### முதல் வரம்பினர்

**சலுகைகள் :** வரி, வட்டி, அபராத நிலுவையின் மொத்தத் தொகையில் 20 சதவிகிதத்தை ஒரே மட்டத் தொகையாக (FLAT RATE) அரசுக்குச் செலுத்தலாம் (அல்லது) ஏற்கெனவே விதிக்கப்பட்ட வரியை ஏற்றுக் கொண்டவர்கள், வரி நிலுவையில் 66 சதவிகிதம், அபராதத்தில் 10 சதவிகிதம், வட்டியில் 10 சதவிகிதம் என அரசுக்குச் செலுத்தலாம்.

**வழக்கு தொடுத்திருந்தால் :** நிலுவை வரியில் 33 சதவிகிதத்தையும், அபராதத்தில் 10 சதவிகி தத்தையும், வட்டியில் 10 சதவிகிதத்தையும் அரசுக்குச் செலுத்தலாம்.

**வரி நிலுவை இல்லை ஆனால், வட்டி அல்லது அபராதம் அல்லது இரண்டும் மட்டும் நிலுவை:** அபராதத்தில் 10 சதவிகிதத்தையும், வட்டியில் 10 சதவிகிதத்தையும் மட்டும் செலுத்தலாம்.

**பயனடைவோர் :** சுமார் 38,200 பேர்

**வரவேண்டிய வரி பாக்கி :** சுமார் ரூபாய் 1,400 கோடி ரூபாய்.

#### இரண்டாவது வரம்பினர்

**சலுகைகள் :** மேலே சொல்லப்பட்ட சதவிகிதங்கள் பொருந்தும். ஆனால், ஒரே மட்டத் தொகை செலுத்தும் முறை கிடையாது.

**பயனடைவோர் :** சுமார் 7,265 பேர்

**வரவேண்டிய வரி பாக்கி :** சுமார் ரூபாய் 3,495 கோடி ரூபாய்.

#### மூன்றாவது வரம்பினர்

**சலுகைகள் :** வரி விதிப்பை ஏற்றுக்கொண்டவர்கள் வரி நிலுவைத் தொகையில் 75 சதவிகிதத்தையும், அபராத நிலுவைத் தொகையில் 15 சதவிகிதத்தையும் மற்றும் வட்டி நிலுவைத் தொகையில் 20 சதவிகி தத்தையும் செலுத்தலாம்.

**வழக்கு தொடர்ந்திருந்தால்:** வரி நிலுவையில் 50 சதவிகிதத்தையும், அபராதத்தில் 15 சதவிகி தத்தையும், வட்டித் தொகையில் 20 சதவிகிதத்தையும் செலுத்தலாம்.

**வரி நிலுவை இல்லை, ஆனால், வட்டி அல்லது அபராதம் அல்லது இரண்டும் மட்டும் நிலுவை:** அபராதத்தில் 15 சதவிகிதத்தையும், வட்டியில் 20 சதவிகிதத்தையும் மட்டும் செலுத்தலாம்.

**பயனடைவோர் :** சுமார் 1,454 பேர்.

**வரவேண்டிய வரி பாக்கி :** சுமார் ரூபாய் 6,800 கோடி ரூபாய்.

#### நான்காவது வரம்பினர்

**சலுகைகள் :** வரி விதிப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் வரி நிலுவையில் 90 சதவிகிதத்தையும், அபராதத்தில் 15 சதவிகிதத்தையும், வட்டி நிலுவையில் 30 சதவிகிதத்தையும் செலுத்தலாம்.

**வழக்கு தொடர்ந்திருந்தால் :** வரி நிலுவையில் 60 சதவிகிதத்தையும், அபராதத்தில் 15 சதவிகிதத்தையும், வட்டியில் 30 சதவிகிதத்தையும் செலுத்தலாம்.

**வரி நிலுவை இல்லை, ஆனால் வட்டி அல்லது அபராதம் அல்லது இரண்டும் மட்டும் நிலுவை:** அபராதத்தில் 15 சதவிகிதத்தையும், வட்டியில் 30 சதவிகித்தையும் மட்டும் செலுத்தலாம்.

**பயனடைவோர் :** 185 வணிகர்கள்

**வரவேண்டிய வரி பாக்கி :** சுமார் ரூபாய் 13,100 கோடி ரூபாய்.

---

## ஆங்கிலத்தில் ஆரியமாயை!




தமிழ்நாட்டின் சிந்தனை வளர்ச்சியைச் செதுக்கியவை தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட தலைவர்களின் கருத்துகள்தான் என்றால் மிகையில்லை. அரசியல் வீரியம்மிக்க அந்த எழுத்துகளைப் பிறமொழிகளுக்கும் கொண்டு செல்ல வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. குறிப்பாக, ஆரியம் - திராவிடம் கருத்து மோதல்கள் உச்சம் பெற்றுள்ள இந்த நாட்களில், பேரறிஞர் அண்ணாவின் ‘ஆரியமாயை’ நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது DRAVIDIAN STOCK பதிப்பகம்.

“பேரறிஞர் அண்ணாவின் சொல்வளம் மிக்க மொழிநடையை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பது மிகச் சவாலானது” என்கிறார் இதனை மொழியாக்கம் செய்துள்ள நெய்வேலி அசோக். “அண்ணாவையும் பெரியாரையும் இந்தியா முழுக்க வாசித்தால், கண்டிப்பாக மாற்றம் ஏற்படும் என்பது என் நம்பிக்கை. தமிழர் அல்லாதோரிடம் பெரியாரையும், அண்ணாவையும், கலைஞரையும் கொண்டு சேர்க்க வேண்டியுள்ளது. அதற்காகத்தான் இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளோம். ஆங்கிலமுறை கல்வி பயிலும் நம் பிள்ளைகளுக்கும் இது பயன்படும். எனது நான்கு வருட ஆசை நிறைவேறியுள்ளது” என்கிறார் பதிப்பாளர் கௌதம். நூல் விலை ரூ.130

நூல் தேவைக்கு 90927-87854 என்கிற எண்ணைத் தொடர்பு கொள்ளலாம். **பேரறிஞர் அண்ணாவின் தீ பரவட்டும்!**

---

## :ப்ளாஷ்பேக்



### கழகக் ‘கோட்டை!’

என் தாத்தா கோட்டை சாமி அவர்கள் பேரறிஞர் அண்ணா காலம் முதலே கழகத்தில் இணைந்து தீவிரமாகப் பணியாற்றி வந்தவர். பல்வேறு பொறுப்புகளை வகித்த அவர், நிலக்கோட்டை தெற்கு ஒன்றிய செயலாளராகவும் சில காலம் செயல்பட்டார். 1993-ஆம் ஆண்டு ஜனவரி 22 அன்று திண்டுக்கல் மாவட்டத்துக்கு கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தந்த முத்தமிழறிஞர் கலைஞரிடம் மாவட்டக் கழகத்தின் சார்பில் ரூ.10 இலட்சம் தேர்தல் நிதியாக வழங்கப்பட்டது. உடன் இன்றைய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களும் இடம்பெற்றிருக்கிறார். காலம் காலமாகக் கழக உணர்வு இன்றைக்கும் தொடர்கிறது.


நிஜான்தன்

**-பி.கே.நிஜான்தன், நிலக்கோட்டை, திண்டுக்கல் மேற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங் களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033- 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---

## கருவூலம்

### தமிழ் மக்களின் கடமை!

**1943-ஆம் ஆண்டு, ஏப்ரல் 1-ஆம் தேதி, ‘திராவிட நாடு’ இதழுக்கு உதவி புரியும்படி தந்தை பெரியார் கடிதம் எழுதினார். அந்தக் கடிதம் 18-ஆம் தேதி ‘திராவிட நாடு’ இதழிலும், 28-ஆம் தேதி ‘விடுதலை’ இதழிலும் பிரசுரிக்கப்பட்டது. சுயமரியாதைக் கருத்துகள் நாட்டில் பரவ வேண்டும் என்கிற வேட்கை கொண்டிருந்த பெரியார், பத்திரிகைகள் வளர்வதிலும் பெரும் விருப்பம் காட்டினார். ‘குடி அரசு’, ‘திராவிட நாடு’ இரண்டையும் ஆதரிக்க வேண்டியது தமிழ் மக்கள் செய்ய வேண்டிய கடமையான தொண்டு ஆகும்’ எனக் கூறியிருந்தார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 285




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131



**காதர்பாட்சா முத்துராமலிங்கம்**
மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர்

**R.S.இராஜகண்ணப்பன்**
மாண்புமிகு
பிற்படுத்தப்பட்டோர் (ம) கதர் கிராம தொழில் வளர்ச்சி அமைச்சர்

**அன்பகம் கலை**
இணை அமைப்பு செயலாளர்

ஆப்பநாடு மறவர் சங்கம் சார்பாக
தொடர்ச்சியாக மூன்றாம் ஆண்டு
**முதுகுளத்தூரில் தேவர் பெருமான்**
முதல் மாலை அணிவித்தார்

**மருத்துவர் ஆசிக் அமீன்**
மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர், இராமநாதபுரம்

இந்த வாய்ப்பினை வழங்கியதற்கு மக்களுக்கு நன்றி



தூத்துக்குடியில் இறகுப்பந்து உள்விளையாட்டரங்கத்தை கனிமொழி கருணாநிதி எம்.பி. திறந்து வைத்த பின்னர், மாலத் தீவு கடலோரக் காவல் படையால் கைது செய்யப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் கூறினார். இதில் அமைச்சர் கீதாஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### தா.இளையஅருணா தலைமை! வெ.சு.சத்தியநாராயணன் ஏற்பாடு! சென்னை வடக்கு மாவட்ட

# மாணவர் அணி சார்பில் மாவட்ட அளவிலான பள்ளி - கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு - கட்டுரைப் போட்டி!

## ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்பிக்கிறார்கள் ! கலாநிதி வீராசாமி - ஜே.ஜே.எபினேசர் பங்கேற்பு!

சென்னை, அக்.30-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை யொட்டி சென்னை வடக்கு மாவட்ட திமுக மாணவர் அணி நடத்தும் மாவட்ட அளவிலான பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டி நாளை (31.10.2023 செவ்வாய்க் கிழமை) காலை 8.30 மணியளவில் அறிவகம் திருமண மாளிகை இராயபுரத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா தலைமை வகிக்கிறார்.

இதில் சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வெ.சு.

சத்தியநாராயணன், மோ.ரவிக்குமார், பிரசிடென்சி சி.சதிஷ், எஸ்.சத்திஸ்வரி, ந.ம.மகேஷ்குமார், நி.எழிலரசன், ஆகியோர் வரவேற்புரையாற்றுகிறார்கள்.

இதில் மாநில மாணவர் அணி இணைச்செயலாளர் எஸ்.மோகன், மாநில மாணவர் அணி துணைச்செயலாளர் மண்ணை தா.சோழராஜன், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் பூர்ணசங்கீதா சின்னமுத்து, ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் கழக அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஆகியோர் சிறப்பிக்கிறார்கள்.

இதில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

போட்டியின் நடுவர்கள் : திராவிட இயல் மாணவர் ச.சண்முகநாதன், சா.தேவராசு, பி.டி.பாண்டிசெல்வம், ஆர்.எம்.டி.ரவீந்திரன், இரா.நரேந்திரன், ந.மனோகரன், இரா.கருணாநிதி, ஆர்.வெற்றிவீரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், மு.கோபி, க.நாகம்மை, வி.தயாளன், இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், க.ஜெயராமன், அ.முருகன், நேதாஜி யு.கணேசன் எம்.சி, ஸ்ரீராமுலு எம்.சி, சர்ப ஜெயதாஸ் எம்.சி, நா.சண்முகம், வே.சிவகுமார், கி.ராஜேந்திரன், எல்.அருளரசன், டி.கமலக்கண்ணன், ப.மதிவாணன், எ.தமிழ்செல்வன், கே.அமுலு, க.கோவிந்தசாமி, லியோ டி.சுரேஷ், ஜெ.கணிகைநாதன், லயன் எம்.தீனதயாளன், கார்த்திகைசெங்குட்வன், ஏ.டி.மணி, எஸ்.எம்.பரசுராமன், ஏ.ரமேஷ்பாபு, வை.கலைவாணன், சி.மணிகண்டன், லட்சுமிவேலு, விமலாமோகன், கோ.சதிஷ், வெ.இன்பராசன், கூல் பாயிண்ட் பிரகாஷ், எஸ்.எம்.அப்துல்ரஹ்மான், எஸ்.டி.சண்முகம், கட்பீஸ்.ப.சோமசுந்தரமூர்த்தி, லயோலா கே.மதன், இர.பொன்இளவரசன், வை.கௌதமன், இ.ரவிக்குமார், மாமன்ற உறுப்பினர்கள் : பா.வேளாங்கண்ணி, வி.விஜயாலட்சுமி, எஸ்.கீதா, ஜெ.நிரஞ்சனா, க.தேவி, நா. குமாரி, என்.பவித்ரா, ஏ.மணிமேகலை, கே.சர்மிளா காந்தி, ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி, சி.ஆனந்தி மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.



சென்னை வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா கலந்து கொண்டு பேசினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.











நாள் : 30.10.2023
இடம் : பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டம்.
பசும்பொன் தேவர் திருமகனார்
116வது ஜெயந்தி விழா மற்றும்
61வது குரு பூஜை விழாவிற்கு
வருகை தரும்
ARASU ARTS
தேசியமும்,
தெய்வீகமும்
எனது இரு கண்கள்
என்ற தேவர் பெருமகனாரின் நினைவைப் போற்றும்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களை வணங்கி மகிழ்கிறோம்...
அன்புடன் வரவேற்கும்
R.S.ராஜகண்ணப்பன் B.Sc.,B.L.,
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் (ம) கதர் கிராம தொழில் வளர்ச்சி அமைச்சர்
கழக தேர்தல் பணிக்குழுத் தலைவர்
காதர்பாட்சா முத்துராமலிங்கம் M.L.A.,
மாவட்டக் கழகச் செயலாளர்
இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க.



அக்டோபர் 30
பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்
116வது பிறந்தநாள், 61வது குருபூஜை
மற்றும் மருதிருவர் சிலைகளுக்கு
மாலை அணிவித்து மரியாதை
செலுத்த வருகை தரும்...
I.N.D.I.A WIN
திராவிட
மாடலே...!
வருக! வருக!! என வரவேற்கும்...
மாண்புமிகு.
R.S.ராஜகண்ணப்பன்
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர்கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர்.
உயர்திரு.
காதர்பாட்சா முத்துராமலிங்கம்
இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர், இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர்
Lr. இன்பா A.N.ரகு B.B.A.,LLB.,
கழக இளைஞரணி துணைச் செயலாளர்
கழக இளைஞரணி



"PRIDE OF I.N.D.I.A."
கலைஞர் 100
1924 - 2023
நாள் : 30 - 10 - 2023,
திங்கட்கிழமை
தெய்வத்திருமகனார்
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
அவர்களின் குருபூஜையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்திடவும்
மதுரை தெப்பக்குளத்தில் உள்ள சுதந்திரப் போராட்ட வீரர்கள்
மருது சகோதரர்களின் திருவுருவ சிலைகளுக்கு
மாலை அணிவித்து மரியாதை செலுத்திடவும்
மதுரை மாநகருக்கு வருகை தரும்
அன்புத் தலைவர்
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களே வருக.. வருக...
Jayam Arts
மாண்புமிகு P.T.R. பழனிவேல் தியாகராஜன்
தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்
உயிருள்ளவரை உங்கள் வழியில்....
அதலை பி.செந்தில்குமார் M.A.,
கழக மாணவர் அணி துணைச் செயலாளர்



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் அரிதாஸ்புரம் மெயின் ரோடில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு திராவிட மாடல் ஆட்சியின் சாதனை விளக்க தெருமுனைப் பொதுக்கூட்டம் பகுதிச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் ஏற்பாட்டில் நடைபெற்றது. வட்டச் செயலாளர் ச.மன்னா ராஜாகண்ணா வரவேற்புரை ஆற்றினார். பகுதி துணைச் செயலாளர் எச்.பாஸ்கர் முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். தலைமை கழகப் பேச்சாளர் கந்திலி கரிகாலன், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மேயர் க.வசந்தகுமாரி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். உடன் என்.நவீன், மகாலட்சுமி கருணாகரன், க.ரமேஷ், வே. தாமோதரன், த.ராஜாராமன், கி.தனசேகரன், எ.வீரபத்திரன், கே.பூபதி, டி.கார்த்திக், சி.ஆர். மதுரைவீரன், ம.பற்குணன், ஓ.தண்டபாணி, பா.பாலசந்தர் ஜெ.இன்சமாம், வெ.ராஜேஷ், சி.ஆர். நரேஷ்குமார், எம்.இளவரசன், எல்.டில்லிபாபு, ம.நாகராஜ், எம்.சார்லஸ், ஆர்.ராதாகிருஷ்ணன், ஜெ.சந்திசேகர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை! பகுதிச் செயலாளர் ஏ.வி.ஆறுமுகம் நிகழ்ச்சி ஏற்பாடு!

## திருவொற்றியூர் மத்தியப் பகுதி பாக முகவர் - பணிக்குழு ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் ஆர். காந்தி சிறப்புரையாற்றினார்! கலாநிதி வீராசாமி எம்.பி. - கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. - சி.தசரதன் பங்கேற்பு!

சென்னை, அக். 30-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மத்தியபகுதி சார்பில், பாகம் 1 முதல் 44 வரை உள்ள பாக முகவர்கள், பி.எல்.ஏ-2, பி.எல்.சி, தேர்தல் பணிக்குழு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 29.10.2023, ஞாயிற்றுக்கிழமையன்று காலை 10.30 மணியளவில், திருவள்ளுவர்திருமணமண்டபம்,சன்னதி தெரு, மணலியில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குபகுதிச் செயலாளரும்2வதுமண்டலக் குழு தலைவருமான ஏ.வி. ஆறுமுகம் எம்.சி, ஏற்பாடு செய்து வரவேற்புரையாற்றினார்.

இக்கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., தலைமை வகித்தார்.

சிறப்புஅழைப்பாளராக அமைச்சர் ஆர்.காந்தி, கலந்துகொண்டுசிறப்புரையாற்றினார்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி.சங்கர் எம்.எல்.ஏ.,பகுதிப்பொறுப்பாளர் சி.தசரதன், 1வது மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு ஆகியோர் பேசினர்.

வ.முத்துசாமி, சாலை. டி.கணேசன், மு.செல்வம், டி.கரிகாலச்சோழன், ஆர். டி.ரமேஷ்குமார்,வி.ஜி.தினகரன், துர்கா கோதண்டம், எஸ்.ஸ்டாலின்,என்.கிருஷ்ணமூர்த்தி,பா.செல்வராஜ், என்.விஜயரங்கன்,எ.ஞானமூர்த்தி எஸ்.ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் எஸ். நந்தகோபால்,வை.மா.அருள்தாசன், மிசா.பா.மதிவாணன், வி.ராமநா தன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு.ராஜேந்திரன், டி.ராமகிருஷ்ணன், அறிவழகி, எம். ஆனந்தன், என்.பரந்தாமன், ஜெ.ஜெ.ஜெய்மதன், டி.ஏ.ராஜீ,இரா.முருகேசன், பி.சாந்தி,புழல்.எம்.நாராயணன், ஜி.துக்காராம், ஜி. தயாளன், மி.வே.கருணாகரன், பெ.சரவணன், ஜி. ராஜேந்திரன்,ஆர்.சி.ஆசைதம்பி,எம்.வி.குமார்,ந.திருசங்கு, ஆர்.எஸ்.சம்பத், கே.பிரபாவதி,இரா.குமரேசன், எஸ்.பாஸ்கரன், ஓய். பரந்தாமன், ஆர். நரேந்திரகுமார், ஆர்.டில்லி, டி.டி. எம்.பாபு வி.பழனிவேல், ஏ.அப்துல் சலீம், கே.கார்த்திகேயன்,எம்.ஜெயராமன், எம்.எத்திராஜ், பி.எஸ். சைலஸ், பி.சந்தான கிருஷ்ணன்,என்.திருசங்கு,இ.குமரவேல், யு.எஸ்.குறலரசன், அ.இந்துமதி, எம்.வஜ்சிரவேல், தினேஷ் குமார், எம். சந்திரகுமார், எஸ்.ஆர். மலைராஜ், வீ.வீரமுத்து, இ.வி.சரவணன்,ஆர்.மோகனசுந்தரம்,பொன்கோ.விஜயன், எஸ்.மகேந்திரன், ஜி.தினேஷ், எஸ்.கணேஷ், எம்.பிரேம்குமார், ஆறுமுகம்,பி.கனிமொழி,டி.கார்த்திகேயன்,

ஜி.துரைசாமி, இ.ஏழுமலை, எம்.குணசுந்தரி, பி.ஆஸ்னாமெரிசியா,எஸ். நந்தினி, கே.காசிநாதன், உதயா ராஜேந்திரன், மு.சிவக்குமார், பி.தம்பையா, கே.பி.சொக்கலிங்கம், டி.சி.வி.விஜயகுமாரி, உமாசரவணன், சரண்யா கலைவாணன், கவி கணேசன்,சுசீலாராஜா,பானுமதி சந்தர்உள்ளிட்டபலர்கலந்துகொண்டனர்.

திருவொற்றியூர் மத்திய பகுதி பொருளாளர் எம்.எஸ்.நாகலிங்கம்நன்றிகூறினார்.

“நீட் விலக்கு நம் இலக்கு”

## சென்னை வடக்கு மாவட்டம் சார்பில் ஒரு இலட்சம் கையெழுத்து!

### மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, அக்.30-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையை ஏற்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னெடுத்த ‘நீட் விலக்கு நமது இலக்கு’ என்ற அடிப்படையில் ‘50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து’ என்ற நிகழ்வின் தொடர்ச்சியாக சென்னைவடக்குமாவட்ட செயற்குழு கூட்டம் 26-10-2023, வியாழன்கிழமை அன்று மாலை மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா தலைமையில் திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் அப்பல்லோ மருத்துவமனை அருகில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாநில நிர்வாகிகள் இரா மதிவாணன், பி.டி.பாண்டி, செல்வம், இரா.நரேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இரா.கருணாநிதி, ந.மனோகரன், பகுதி கழகச் செயலாளர்கள் ராயபுரம் பகுதி செயலாளர்கள் இரா.செந்தில், வ.பெ. சுரேஷ், ஆர். கே.நகர் பகுதி கழகத்தின் செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ். ஜெபதாஸ் பாண்டியன், பெரம்பூர் பகுதி கழக செயலாளர்கள் அ.முருகன், க.ஜெயராமன், மாவட்ட கழக நிர்வாகிகள் மு.கோபி, எஸ்.ஆர்.கமலக்கண்ணன், நாகம்மை கருப்பையா, வி.தயாளன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் நா.சண்முகம், டி.கமலக்கண்ணன், வே.சிவக்குமார் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் காகோவிந்தசாமி, லியோ.டி.. சுரேஷ் ஜி. தீனதயாளன், கோசதீஷ், இன்பராஜ், சண்முகம், மணிகண்டன், பரசுராம், லட்சுமி வேலு, விமலா மோகன், எஸ்.சத்யநாராயணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் உரையாற்றிய மாவட்டக் கழக செயலாளர் சென்னை வடக்கு மாவட்டத்தில் சுமார் ஒரு லட்சத்திற்கும் குறையாத நீட் தேர்வு எதிர்ப்பு கையெழுத்து பெற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மேலும் அடுத்தடுத்த தினங்களில் அனைத்து பகுதிகளிலும் முகாம் அமைத்து கையெழுத்து இயக்கத்தை ஒரு மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாவட்ட பொருளாளர் வி.தயாளன் நன்றி கூறினார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மத்திய பகுதிக் கழகம் சார்பில் பாக முகவர்கள் பி. எல்.ஏ. 2 மற்றும் பி.எல்.சி. தேர்தல் பணிக்குழு ஆலோசனை கூட்டம் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ் சுதர்சனம் எம்எல்ஏ தலைமையில் திருவெற்றியூர் மத்திய பகுதி கழக செயலாளர் இரண்டாவது மண்டல குழு தலைவருமான ஏ.வி. ஆறுமுகம் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் கலாநிதி வீராசாமி எம்.பி, கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் சி. தசரதன், வட்ட செயலாளர்கள் வ. முத்துசாமி, சாலை டி. கணேசன், மு. செல்வம் டி . கரிகால சோழன், பகுதி நிர்வாகிகள் ஆர்.டி. ரமேஷ் குமார், வி.ஜி.தினகரன், துர்கா கோதண்டம், என், கிருஷ்ணமூர்த்தி, எஸ். ஸ்டாலின், பா. செல்வராஜ், எஸ், விஜயரங்கன், ஏ. ஞானமூர்த்தி, எஸ் ஸ்ரீதர் ஆகியோரும் மற்றும் இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி பொதுமக்களும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தா.இளைய அருணா துவக்கி வைக்கிறார் !

## ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி சார்பில் நீட் விலக்கு கையெழுத்து இயக்கம்!

### இரா.லட்சுமணன் தலைமை! கலாநிதி வீராசாமி, ஜே.ஜே.எபினேசர் பங்கேற்பு !

சென்னை அக்:30

நீட் தேர்வை எதிர்த்து மாபெரும் கையெழுத்து முகாம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி சார்பில் இன்று (30.10.2023 திங்கட்கிழமை) காலை 8.00 மணியளவில் அரசு கலைக் கல்லூரி அரசு அச்சக குடியிருப்பு அருகில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன் தலைமை வகிக்கிறார். என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா நீட் கையெழுத்து முகாமை துவக்கி வைக்கிறார்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆர். வெற்றிவீரன், ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

மாவட்ட கழக நிர்வாகிகள் வட்டச் செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு ஆர். கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் கேட்டுக்கொள்கிறார்.





தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்
போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு 20%BONUS
01.07.2023 முதல் 4% அகவிலைப்படியை உயர்த்தி வழங்கிய
தொழிலாளர்களின் பாதுகாவலர்
கழக தலைவர் மாண்புமிகு
தமிழ்நாடு முதல்வர்
அவர்களுக்கும்
மாண்புமிகு முனைவர்
க.பொன்முடி M.A.,Ph.D.,B.L.,
உயர்கல்வித்துறை அமைச்சர் / கழக துணை பொதுச்செயலாளர்
மாண்புமிகு
சா.சி.சிவசங்கர் அவர்களுக்கும்
போக்குவரத்துறை அமைச்சர்
மு.சண்முகம் M.P., கி.நடராசன்
பொதுச்செயலாளர்-தொ.மு.ச.பேரவை பொருளாளர்-தொ.மு.ச.பேரவை
ஆகியோருக்கும் எங்களின் இதயங்கனிந்த நன்றி!!
D.ஞானசேகரன் V.சேகர் M.குமாரசாமி
தலைவர் பொதுச்செயலாளர் பொருளாளர்
மற்றும் அனைத்து மத்திய சங்க நிர்வாகிகள்-பணிமனை நிர்வாகிகள்
தொழிலாளர் முன்னேற்ற சங்கம்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,விழுப்புரம் மண்டலம்


முத்தமிழறிஞர்
கலைஞர்
அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு
பள்ளி மாணவ மாணவியருக்கான
கலைஞரின் கவிதைகள் திரைப்பட
வசனங்கள் ஒப்பித்தல் போட்டி
நாள் : 30.10.2023, திங்கட்கிழமை | காலை : 9.00 மணி
இடம் : அன்பகம், அண்ணாசாலை, தேனாம்பேட்டை
வரவேற்புரை
மயிலை இரா.கா.இளங்கோவன் மாவட்டத் தலைவர்
நந்தனம் ஆர்.கே.சிவகுமார் மாவட்டத் துணைத்தலைவர்
எஸ்.ஆர்.ராஜா சுரேஷ்குமார் 122வது வட்டச் செயலாளர்
கோயில் தி.ரமேஷ் துணை.ஆனந்த் ராஜ் ஜி.எம்.செல்வராஜ் அ.தேவேந்திரன்
மாவட்டத் துணை அமைப்பாளர்கள்
முன்னிலை
நந்தனம் கி.மதி MC செயலாளர், மயிலை மேற்கு பகுதி
மயிலை எஸ். முரளி செயலாளர், மயிலை கிழக்கு பகுதி
கே.ஏழுமலை MC செயலாளர், தி.நகர் மேற்கு பகுதி
கோ.சு.மணி தலைமை செயற்குழு உறுப்பினர்
தலைமை
ச.சண்முகநாதன்
மாவட்ட அமைப்பாளர், திமுக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை
தொடக்க உரை
மாம்பலம் ஆ.சந்திரசேகர் தலைவர்
நந்தனம் வேதா துணைச் செயலாளர்
மு.சத்யா துணைச் செயலாளர்
கே.மலர் துணைச் செயலாளர்
என்.அன்பழகன் பொருளாளர்
நடுவர்கள்
முனைவர் நெல்லை சா.அசரியா இலக்கியம் சா.தேவராசு கவிஞர் வேளாங்கண்ணி பொன்னிவளவன்
போட்டிகளைத் துவக்கி வைத்து வாழ்த்துரை
கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன் MP
மாநில துணைத் தலைவர், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை
எஸ்.மோகன்
மாநில இணைச் செயலாளர், திமுக மாணவர் அணி
கலைமாமணி இறையன்பன் குத்தூஸ்
மாநிலச் செயலாளர், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை
கவிஞர் நன்மாறன்
மாநில துணைச் செயலாளர், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை
வெற்றி பெற்றவர்களுக்கு சிறப்புப் பரிசு வழங்கி சிறப்புரை
மயிலை த.வேலு MLA
செயலாளர், சென்னை தென்மேற்கு மாவட்டம்
மாணவ - மாணவியருக்கு ஊக்கப் பரிசு வழங்கி வாழ்த்துபவர்
ஜெ.கருணாநிதி MLA
தி.நகர் கிழக்கு பகுதி செயலாளர்
மயிலை பகுதி வட்டச் செயலாளர்கள்
சீ.கிருஷ்ணமூர்த்தி டி.ராஜவேலு அ.நாகராசன் மு.இ.ஏழுமலை மு.ராஜேந்திரன் A.தாஸ் மா.பா.அன்பு பாலகிருஷ்ணன்
அ.நவநேசன் E.வெற்றிவேல் கோ.கண்ணன் துரை பார்த்திபன் ப.பொன்னுசாமி
தியாகராயநகர் பகுதி வட்டச் செயலாளர்கள்
டி.கமல் தட்சன் ஹரிஹரன் மு.ம.செந்தில்குமார் எம்.கிருஷ்ணமூர்த்தி ந.மோ.முரளி கே.எஸ்.வெல்டின்ராஜா பி.மாரி
பி.ஜெயக்குமார் ஆர்.சக்திவேல் வி.பி.செந்தில்குமரன் எம்.எஸ்.பழனி மு.செல்வகுமார் என்.துரை எஸ்.லட்சுமிகாந்தன்
நன்றியுரை
ஜி.மோகன்ராஜ் மாவட்டத் துணை அமைப்பாளர்
சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை


அக்டோபர் - 30
பசும்பொன்
தேவர் திருமகனார்
குருபூஜை விழாவிற்கு
வருகை தரும்
கழகத் தலைவர்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களை வருக! வருக!!
என அன்புடன் வரவேற்கும்...
R.S.ராஜகண்ணப்பன் B.Sc., BL.,
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராம தொழில்
வாரியத்துறை அமைச்சர் கழக தேர்தல் பணிக்குழுத் தலைவர்
காதர்பாட்சா முத்துராமலிங்கம் B.A., MLA
இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர்
Vettri Arts 98402 06731
அன்புடன் ஏ.சி.ஜீவானந்தம் இராமநாதபுரம் மாவட்டம்




அக் 30 பசும்பொன் **தேவர்** ஜெயந்தி விழாவிற்கு வருகைதரும்

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# கழக தலைவர்

## அவர்களே வருக! வருக!!

மாண்புமிகு. **R.S.ராஜகண்ணப்பன்** அவர்கள்
கழக தேர்தல் பணிக்குழுத் தலைவர், பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்

திருமிகு. **சுப.தங்கவேலன்** அவர்கள்
முன்னாள் அமைச்சர், கழக செயல்திட்ட குழு உறுப்பினர்

திருமிகு. **காதர்பாட்சா முத்துராமலிங்கம்** MLA, அவர்கள்
மாவட்ட கழக செயலாளர், இராமநாதபுரம் மாவட்டம்

**K.முருகவேல்** Ex. MLA, மாநில விவசாய அணி துணை செயலாளர்,
முதுகுளத்தூர் - இராமநாதபுரம் மாவட்டம்.